Registered as a News paper in Sri Lanka

விலை ரூபா: 8.00

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 28 சனிக்கிழமை (13.08.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 237

அருந்துங்கள்
அண்ணா கோப்பி
அண்ணா கோப்பியை
உடனுக்குடன் வறுத்து அரைத்து
பெற்றுக்கொள்ள
அண்ணா கோப்பிக்கடை
4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்

## மூத்த அறிவிப்பாளர்

# ரேலங்கியும் அவரது கணவரும் கொழும்பில் நேற்று சுட்டுக்கொலை



### அவர்து அலுவலகத்தில் நின்றிருந்த வேளை சம்பவம்

(கொழும்பு)

ஊடகவியலாளரும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத் தாபனத்தின் மூத்த அறிவிப்பாளருமான திருமதி ரேலங்கி செல்வ ராசாவும் அவரது கணவரும் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் பம்பலப்பிட்டியில் வைத்து இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல் லப்பட்டுள்ளனர்.

தொலைக்காட்சி, வானொலிகளின் பிரபல அறிவிப்பாளரான திருமதி ரேலங்கி செல்வராசா (வயது 45) மற்றும் அவரது கணவர் சின்னத்துரை செல்வராசா (வயது 48) இருவரும் பம்பலப்பிட்டி சென் பீற்றஸ் லேனில் உள்ள அவர்களுக்குச் சொந்தமான பிரயாணமுகவர் நிலையத்திற்கு சென்றிருந்தபோது அங்கு நுழைந்த சிலர் அவர்களை சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவ் நிலையத்தில் இருந்த கணக் காளரும் (10 ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பிரதியமைச்சர்கள் நேற்று நியமனம்

(கொழும்பு)

புதிய பிரதியமைச்சர்களாக மூவரை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நியமித்துள்ளார். நேற்று முதல் அமுலுக்கு வரும்வகையில் இந்நியமனம் வழங்கப் பட்டுள்ளது. எரிபொருள் மின்சக்தி பிரதியமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமுகே, சமுர்த்தி மற்றும் வறுமை ஒழிப்பு பிரதி (10 ஆம் பக்கம் பார்க்க)

## பொலிஸ் சார்ஜன்ட் சுட்டுக்கொலை

தெகியத்த கண்டிப்பகுதியில் உள்ள ஜக்குற என்னும் இடத்தில் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் நேற்று பிற்பகல் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

மறைந்திருந்த சிலரே பொலிஸ் சார்ஜன்ட் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாக அம்பாறை சிரேஷ்ர பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

இச்சம்பவத்தில் ஊர்காவல் படை வீரர் ஒருவர் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

பிந்திய செய்தி

# அமைச்சர் கதிர்காமர் சுட்டுக்கொலை நேற்று நள்ளிரவு திகில் சம்பவம்



இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் இன்று அதிகாலை இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்தார்.

கொழும்பு 7 விஜயராம மாவத்தையில்வைத்து தூரத்தில் இருந்து குறி பார்த்துச் சுடும் சினைப்பர் ரக துப்பாக்கி மூலம்சுடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது. நேற்று இரவு 11.45 மணியளவில் இடம் பெற்ற இத் தாக்குதலில் படுகாயமடைந்த கதிர்காமர் மருத்துவமனை ஒன்றில் சேர்க்கப்பட்டபோதும் சிகிச்சை பயனளிக்காமையால் இன்று அதிகாலை ஒரு மணியளவில் உயிரிழந்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தினையடுத்து முப்படையினரும் இணைந்து பாரிய தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட் டுள்ளனர். (ச)

## இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் நேற்று மாலை அம்பாறைக்கு விஜயம்

இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவர் வஸீர் வலிமுஹமட் நேற்று அம்பாறைக்கு விஜயம் செய்தார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட அம்பாறையில் உள்ள பிரதேசங்களில் பாகிஸ்தான் உதவியுடன் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித்திட்டங்கள் குறித்து ஆராய்வதற்காகவே அங்குஅவர் விஜயம் செய்தார்.

இவரது பயணத்தை அடுத்து அம்பாறையில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதேவேளை பாகிஸ்தான் தூதுவரின் வருகையையொட்டி பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட் டுள்ளது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான செயற்பாடுகளுடன் அரசியலை இணைக்கக் கூடாது

### கஜேந்திரகுமார் எம்.பி

(கொழும்பு)

தமிழ் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தற்போது நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பே தடையாக உள்ளதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

சமாதான செயற்பாடுகளுடன் அரசியல்நோக்கங்களை இணைக்கக் கூடாது. அதிகார பரவலாக்கல் முறைக்கும் இந்த அரசியல் யாப்பு முறைமை இடையூறாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

சுனாமிக்குப் பின்னரான நடவடிக்கை முகாமைத்துவ கட்டமைப்பு மீதான விவாதம் நேற்று இரண்டாவது நாளாகவும் பாராளுமன்றத்தில் நடைபெற்றது. அதன் போது உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

சமாதான செயற்பாடுகள் தொடர்பாக தமிழ் மக்கள் குழப்பமடைந்த சூழ்நிலையில் காணப்பட்டபோதே சுனாமி பேரலையும் அவர்களைத் தாக்கியது.

இவ்வாறான சூழ்நிலையில் சுனாமி பொதுக்கட்டமைப்பினை எட்டிஉதைத்ததால், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்கள் சிதறடிக்கப்பட்டுள்ளன என அவர் தெரிவித்தார். (ச-4)

## ஜே.வி.பியின் அழைப்பு அரசினால் நிராகரிப்பு

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை உடனடியாக ரத்துச்செய்தால் மாத்திரமே எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளருக்கு ஆதரவை வழங்க முடியும் என்று ஜே.வி.பி. விடுத்த நிபந்தனையை அரசு நிராகரித்துள்ளது.

ஜே.வி.பியினர் நிபந்தனை விடுத்ததை இட்டு உரையாற்றிய சுதந்திரக்கட்சியின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன, பொதுக்கட்டமைப்பு தொடர்பாக எந்த வித எதிர்ப்பு வந்தாலும் எந்தப்பெரிய கட்சிகள் எதிர்த்தாலும் சகல எதிர்ப்புக்களையும் முறியடித்து பொதுக் கட்டமைப்பை தொடர்ந்து முன்னெடுப்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார்.

எந்தச் சக்தியாலும் பொதுக்கட்டமைப்பைத் தடுத்துவிட முடியாது. இனப்பிரச்சினைதொடர்பாக ஜே.வி.பியினர் கொண்டிருக்கும் நிலைப்பாடு இனப்பிரச்சினையை தீர்த்துவைக்க எந்தக் காலகட்டத்திலும் உதவாது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 0777-2349
011-2372952-3, 011-2360290, 011 - 2360291
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# சூழலை மிக மோசமாகப் பாதிக்கின்ற இடமாக யாழ். குடாநாடு மாறியுள்ளது

## விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே.பாலகுமாரன் சுட்டிக்காட்டு



(கிளிநொச்சி)

யாழ்ப்பாணக் குடாநாடு சூழலை மிக மோசமாகப் பாதிக்கின்ற இடமாக மாறியுள்ளது என விடுதலைப புலிகளின் மூத்த உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் அமைந்துள்ள சூழல் நல்லாட்சி ஆணையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் சிறப்புரையாற்றுகையில்,

மண்மீட்பு என்பது மண்ணோடு இணைந்த அனைத்து உயிரினங்களையும், சூழலையும் பாதுகாப்பதாகும். இந்த மண்ணைக் காப்பதற்காக நாங்கள் பல நெருக்கடிகளுக்கு மத்தியில் போராடி வருகின்றோம். அத்தகைய ஒரு மண்மீட்பு எனபது வெறுமனே ஒரு இராணுவ ரீதியான, அரசியல் ரீதியான, மீட்பாகவும் இருக்க்கூடாது. இதனை நீண்டகாலமாக நாங் கள் புரிந்திருந்தாலும் கூட இராணுவ அழுத்தங்கள் எம்மீது அதிகமாக சூழ்நதிருநத வேளையில் இது தொடர்பாக நாங்கள கூடிய கவனத்தைச் செலுத்த முடியவில்லை.

சூழல் பற்றி கவன ஈர்ப்பு என்பது எங்கள் எல்லோரிடமும் உள்ளது. எத்தனையோ முயற்சிகளுக்கு ஊடாக சூழலைப் பாதுகாப்பதற்கு மேற்குலக நாடுகள் முயற்சி எடுத்து வருகின்றன.

சூழலோடு ஒட்டி வாழ்ந்த நாங்களே சூழலை மிக மோசமாக அழிக்கின்றோம். குறிப்பாக யாழ்ப்பாணக குடாநாடே சூழலை மிக மோசமாக பாதிக்கின்ற இடமாக மாறியுள்ளது. சூழல் தொடர்பாக தமிழர்களாகிய நாங்கள் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும் என்று குறிப்பிட்டார்.

கிளிநொச்சியில் உள்ள விடுதலைப்புலிகளின் திட்டமிடலுக்கும், மேம்பாட்டிற்குமான செயலகத்தில் சூழல் நல்லாடசி ஆணையகத்தின் திட்டமிடலுக்கும், மேம்பாட்டிற்குமான செயலகப் பணிப்பாளர் ச.ரஞ்சன் தலைமையில் நேற்றுமுன தினம் காலை 10.00 மணிக்கு இக் கலந்துரையாடல் ஆரம்பமானது.

இந்நிகழ்வில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளா மருத்துவ க்லாநிதி விக்னேஸ்வரன் உட்பட, யாழ்ப்பாணம், வவுனியா உள்ளிடட மாவட்டங்களைச் சேர்ந்த பரதேச உள்ளூராட்சி ஆணையாளர்கள், சுகாதார உத்தியோகத்தர்கள், நீரவழங்கள் வடிகாலமைப்புச் சபையினர், கலந்துகொண்டனர்.

இதேவேளை முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களுககான இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கடந்த புதன்கிழமை இங்கு நடைபெற்றிருந்தமை குறிப்பிடத் தக்கது. (ந-4)

## சிறுவிளம்பரம்

### சன்மானம் வழங்கப்படும்

இ.சோமசுந்தரம், மீசாலை முகவரியுடைய மோட்டார் சைக்க'ள் வரி, காப்புறுதிப் பத்திரங்கள் சாவகச்சேரியில் தவறி விட்டது.

கண்டெடுத்தவர்கள் மேற் குறிப்பிட்ட முகவரியில் அல்லது சாவகச்சேரி நகரசபையில் ந. இராசதுரையிடம் ஒப்படைக கவும். சன்மானம் வழங்கப் படும்.

(C/1608)

# பேச்சாற்றலை மீளப் பெற்ற சிறுமி!

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தில் குடும பத்தவர்கள் ஏழுபேர்களை இழந்த 15 வயது இலங்கைச் சிறுமியான ருவாணி சித்தாரா பேசும் ஆற்றலை இழந்திருந்தார்.

ஸ்கொட்லாந்தின் தலைநகரில் அண்மையில் நடைபெற்ற உலகப் புகழ் கலை விழாவொன்றில் கோரஸ இசையின் போது தன்னையுமறியாமல் இச் சிறுமி பேச ஆரம்பித்தார் என இலண்டன் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

"இது எனக்கு பெரிய அதிர்ச்சியாக உள்ளது. நான் எனது சகோதிரியை இழந்தேன். குடும்பமே அழிந்தது. எனது பாடசாலை வாழ்வும் முடிந்தது. நான் இங்கே வருவேன் என்று கற்பனைகூட பண்ணியதில்லை. இது முற்றிலும் புதியதொரு அனுபவமாக இருக்கிறது" என்று சித்தாரா தனது உரைமொழி பெயர்ப்பாளர் மூலம் நிருபர்களிடம் தெரிவித்துள்ளார்.

மேற்படி இசை நிகழ்ச்சி ஆடல் கலைகளில் பயிற்சி பெறவைப்பதற்காக பிள்ளைகளை எடின்பரோவுக்கு அழைத்து வருவதன்மூலம் 20,000 ஸ்ரேளிங் பவுண்டுகளை திரட்டுவதற்காக நடாத்தப்பட்டதாகும். இதில் அவுஸ்திரேலியப் பாடகி கிளி மினோக் கலந்துகொண்டிருந்தார். (ந-6)

# தனது பொறுப்பை அரசு தட்டிக்கழிக்க முடியாது

## அமைச்சர் டியூ குணசேகர

வடக்கு - கிழக்கு மக்களின் உரிமைகளைப பாதுகாப்பது தொடர்பாக ஆளும் கூட்டணி அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டிருப்பது தட்டிக்கழிக்க முடியாத பொறுப்பாகும் என அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்கு மக்கள் பல பிரச்சினைகளை எதிர்கொள்கின்றார்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற சுனாமி அனர்த்த நிவாரண சபை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ந-4)

# பரிசளிப்பு விழா

(கொழும்பு)

நெல்லியடி மத்திய மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு அதிபர் எஸ்.சேதுராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இப்பரிசளிப்பு விழாவிலே தொழிலதிபர் என்.பாஸ்கரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். திருமதி இந்திராணி பாஸ்கரன் பரிசில்களை வழங்குவார். (அ-52)

# பொதுக்கட்டமைப்பு அமுல்படுத்தப்படின் மீளமைப்புப் பணிகள் இலகுவாக்கப்படும்

## - ஆளுநர் டிரோன் நம்பிக்கை

(கிளிநொச்சி)

சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படுமானால் மீள் கட்டமைப்புப் பணிகள் இலகுவாக இடம்பெறும் என்று வடக்கு கிழக்கு ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு - கிழக்குப் பிரதேசங்களின் மீள்கட்டமைப்பு நடவடிக்கைககள் இயல்பு நிலையில் இடம் பெற்று வருவதாக அவர் தெரிவித்துள்ளார்.ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலும் மாவட்ட செயலாளர்கள் ஊடாக நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்து பல கூட்டங்களை புலிகளை இணைத்து நடாத்தினோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ந-4)

## இராசி பலன்

13.08.2005
(ஆடி 28, சனிக்கிழமை)
அட்டமி பிற்பகல் 2.56 மணிவரை
விசாகம் பிற்பகல் 04.34 மணிவரை
இராகுகாலம் 09.05 - 10.35 மணிவரை
சுபநேரம் 03.05 - 04.35 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | மனஸ்தாபம், காரியதடங்கல், ஆரோக்கியக் குறைவு, அபகீர்த்தி. |
| இடபம் | எடுத்த கருமங்கள் கைகூடும், போசன சுகம், நண்பர்கள் சந்திப்பு, நல்ல தகவல். |
| மிதுனம் | பகைவர் நேசம், காரிய நன்மை, பெருமையடைதல், போசனசுகம். |
| கடகம் | புத்திரரால் கவலை, முயற்சி தாமதம், ஆரோக கியக் குறைவு, தனவிரயம் |
| சிங்கம் | உடல் நலக்குறைவு, மனச்சோர்வு, வேலைச சுமை, காரியதாமதம். |
| கன்னி | தொழில்விருத்தி, சகோதரர் உதவி, எடுத்த கருமங்கள் கைகூடும், பிரயாணம். |
| துலாம் | பணவிரயம், காரிய தாமதம், போசன சுகக் குறைவு, விவாதம். |
| விருச்சிகம் | சிந்தனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, முயற்ச பலிதம், பொருள் சேர்க்கை. |
| தனுசு | உணர்ச்சி வசப்படுதல், காரியதாமதம், பண விரயம், பிரயாணம். |
| மகரம் | எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம், புதிய தகவல், குடும்ப மகிழ்ச்சி. |
| கும்பம் | மேன்மை, முயற்சிகைகூடும், நண்பர்கள் உதவி, உற்சாகம். |
| மீனம் | பிதாசிந்தை, முயற்சிதாமதம், ரோகநிலை, கட்டுப்பாடு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.

- வளவன்

### கிழக்கில் கடும் வறட்சி

# குடிநீருக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம்!

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் தற்போது நிலவும் கடுமையான வறட்சியினால் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய அபாயநிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களில் உள்ள கிணறுகளில் நீர் வற்றியுள்ளதனால் மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரியவருகிறது.

சுனமி ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலும், தற்காலிக குடியிருப்புக்களிலும் தங்கியுள்ள மக்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

கிழக்கில் தற்போது நிலவிவரும் கடுமையான வறட்சியின் காரணமாக பிரதான நீர்த்தேக்கங்கள் வற்றி நீர்மட்டம் வெகுவாகக் குறைவடைந்துள்ளதாகவும தெரியவருகிறது. (ந-9)

# திருமலையில் துப்பாக்கிச் சூடு இரு இளைஞர்கள் காயம்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டம் மல்லிகைத்தீவு சந்தியில் நேற்றுமுன்தினம் நண்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் இருவர் காயமடைந்து குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

ஏற்கனவே கடற்படையிலிருந்து தலைமறைவாகிய எம்.ஜி.ரோஹித மற்றும் என்.ஜி.குமார் ஆகியோரே காயமடைந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இளைஞர்கள் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை செய்துவிட்டுத் தப்பிச்சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ந-4)

# சகல பயிலுநர் பட்டதாரிகளுக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படும்

(கொழும்பு)

பயிற்சி பெற்ற பட்டதாரிகள் அனைவருக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதற்கு ஆளும் கூட்டமைப்பு அரசாங்கம் அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொள்ளும் எனச் சமூக அபிவிருத்தி அமைச்சர் சுமேதாஜி ஜெயசேன தொவித்துள்ளார்.

இதற்குத் தேவையான திட்டங்களை உடனடியாக அமுல்படுத்துமாறு சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக கொழும்பில நடைபெற்ற நிகழவொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் தெரிவித்தார்.

நிரந்தர சேவையில் சேர்க்கப்படும் பட்டதாரிகள் நாட்டின் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கேற்பார்கள் எனவும் அவர் தெரிவித்தார். (ந-4)

# வடக்கு கிழக்கு கல்விப் பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி தலைமையில் கலந்துரையாடல்

வடக்கு - கிழக்கு மாகாண கல்விப் பிரச்சினை தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் ஜனாதிபதிக்கும் உயர் கல்வி அமைச்சருக்கும் இடையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையில எதிர்வரும் 24ஆம் திகதி மாலை பாராளுமன்ற கட்டத்தொகுதியில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட வலய கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாண அமைச்சின் சிரேஷ்ட உயர் அதிகாரிகள், வடக்கு - கிழக்கு மாகாண சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். குறிப்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் 22 பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதியுடனான கலந்துரையாடலில் கலந்து கொள்ளவுள்ளனர்.

உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள பாடசாலைகளைத் திறப்பது ஆசிரியர் நியமனம் உட்பட பல விடயங்கள் ஜனாதிபதியுடன் கலந்துரையாடப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளரையும் இந்தக் கலந்துரையாடலுக்கு அழைக்கவேண்டும என தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கோரியுள்ளது. (அ-9)

# அனுமதி பெறாமல் அமைக்கப்பட்ட சகல ஆலயங்களையும் அகற்றவும்

## திருமலை நகரசபை அறிவுறுத்தல்

(கொழும்பு)

திருகோணமலை நகரசபை தனது எல்லைக்குட்பட்ட பகுதியினுள் சட்டவிரோதமாக அனுமதி இன்றி அமைக்கப்பட்ட சகல ஆலயங்களையும் அகற்றுமாறு அறிவுறுத்தல் விடுத்துள்ளது.

இதற்காக ஒருவார கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இதனை அகற்றாது விடின் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும என அந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 15ஆம் திகதி பேருந்து தரிப்பிடத்தில் சட்டவிரோதமாக இரவு வேளையில் புத்தர் சிலை ஒன்று அமைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து தமிழ் மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். 5 தினங்கள் ஹர்த்தால் நடைபெற்றது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாக தமிழ்மக்கள் பேரவை மேற்கொண்ட எதிர்ப்புப் போராட்டங்கள் கைவிடப்பட்டன.

இந்தப் புத்தர் சிலை அகற்றப் படுவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் தன்னால் எடுக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதற்காக 3 தடவைகள் அமைச்சர் குழுவொன்றினை திருகோணமலைக்கு அனுப்பி தமிழ் மக்கள் பேரவையுடன் பேச்சுக்களை நடத்தியமை குறிப்பிடததக்கது. (அ-9)

# அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம் வண்ணை பிறவுண வீதியிலுள்ள அருள்மிகு ஸ்ரீ பத்திர காளி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 24ஆம் திகதிவரை தொடர்ந்து நடைபெறவுள்ளது. (அ-7)

# ஆயுதங்களுடன் வந்த இந்தோனேஷிய கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தடுத்து வைப்பு


ஆயுதங்களுடன் வந்த இந்தோனேஷிய கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தில் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

இந்தோனேஷியாவிலிருந்து ஆயுதங்கள் மற்றும் வெடி பொருட்களுடன் வந்து கொழும்புத்துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பலொன்றை இலங்கைக் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு இந்தக் கப்பல துறைமுகத திற்கு வெளியே வந்து நின்ற போது, இந்தக் கப்பல் குறித்து ஏற்பட்ட சந்தேகத்தையடுத்து கடற்படையினர் இக் கப்பலைச சோதனையிட்டுள்ளனர்.

இதன்போது, அந்தக் கப்பலினுள் பெருமளவு மோட்டார் குண்டுகள் மற்றும் வெடி பொருட்கள என்பன இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றை விட அந்தக்கப்பலினுள் இரு அம்புலன்ஸ்களும்



இருந்துள்ளன.

இது தொடர்பாக கப்பல் கப்டனை கடற்படையினர் விசாரித்த போது, பங்களாதேஷ் நோக்கித தாங்கள் சென்று கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இக்கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருப்பதுடன் இது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ற)

# மன்னாரில் 27ஆம் திகதி தமிழ் எழுச்சி மாநாடு

(மன்னார்)

மன்னாரில் எதிர்வரும் 27ஆம் திகதி தமிழ் எழுச்சி மாநாடு நடத்தப்படவுள்ளது. அன்றைய தினம் முற்பகல் 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிவரை இந்த மாநாடு நடத்தப்படவுள்ளது.

மன்னார் பொதுவிளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள இந்த மாநாடு தொடர்பில் ஆயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் நடைபெற்றுள்ளது.

ஏற்கனவே வவுனியாவில் நடைபெற்ற மாநாட்டின் அடிப்படையிலேயே இந்த மாநாடு நடத்தப்படவிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ற-9)

# கையெழுத்து வேட்டையில் ஐ.தே.கட்சி ஒரே நாளில் 10,000 கையெழுத்துக்கள்!

ஜனாதிபதித் தேர்தலை இவ் வருட இறுதியில் நடத்துமாறு தேர்தல் ஆணையாளரையும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவையும் வலியுறுத்தும் பொருட்டு தேசிய மட்டத்தில் பத்து இலட்சம் பேரின் கையொப்பத்தை திரட்டும் முகமாக ஐக்கிய தேசியக் கட்சியால ஏற்பாடு செய்யப்பட்ட வாகன ஊர்வலம் நேற்று முன்தினம் மாலை மாத்தளையைச் சென்றடைந்தது.

இதன்போது மாத்தளை மாநகர பிதா முகம்மத் ஹல்மி கரீம் தலைமையிலான நகரசபை உறுப்பினர்களால் பிரமாண்டமான முறையில் இவ் ஊர்வலதற்கு வரவேற்பளிக்கப்பட்டது.

தியபிபுல சந்தியில் அளிக்கப்பட்ட இந்த வரவேற்பு நிகழ்வில ஐ.தே.க. மாத்தளை தொகுதி அமைப்பாளரும் மத்திய மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான வசந்த அலுவிகார, துணை முதல்வர் வீ.ஜீ.ஜினதாச, நகரசபை உறுப்பினர்களான அனஸ் றியாழ், ஆர். விஜயகுமார், எஸ். பிரகர், பாலித ஹேரத், மைத்திரபால, யட்டவத்த பிரதேசசபை உறுப்பினர் ரஞ்சன் ஹந்தராகம உட்பட ஐ.தே.க.வின் பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இந்த வாகன ஊர்வலம் மணிக்கூட்டுக் கோபுரத்தை வந்தடைந்த போது ஐ.தே.க. ஆதரவாளர்கள் பட்டாசு கொளுத்தி ஆரவாரம் செய்தும் வரவேற்றனர்.

அதனையடுத்து, மணிக்கூட்டுக் கோபுர சந்தி, விகாரை வீதிச் சந்தி, ஆலமரச்சந்தி ஆகிய இடங்களில் கையெழுத்துப் பெறப்பட்டது. பெருந் தொகையான மக்கள் போட்டி போட்டுக் கொண்டு ஆர்வத்துடன் கையெழுத்திட்டனர்.

மாத்தளை நகரில் சுமார் ஒரு மணித்தியாலத்துக்குள் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் கையொப்பமிட்டனர்.

தொடர்ந்து, களுதாவளை, இரததோட்டை வீதியில் கையெழுத்து பெறப்பட்டது. வாகன ஊர் வலம் களுதாவளை பாலத்தை சென்றடைந்த போது ஐ.தே.க. இரத்தோட்டைத் தொகுதி அமைபபாளரும் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சஞ்சீவ கவிரத்ன தலைமையில் வரவேற்பளிக்கப்பட்டது.

பின்னர் இரத்தோட்டை நகர் வரை ஊர்வலம் சென்று மாலையில் மீணடும் மாத்தளை பிரதான வீதியில கையெழுத்து பெறப்பட்டது.

நேற்றுக் காலை பலகடுவ, உக்குவளை பிரதேசத்திலும் சஞ்சீவ கவிரத்ன தலைமையில் கையெழுத்து பெறப்பட்டது. மாத்தளை மாவட்டத்தில் சுமார் இரண்டு இலட்சம் கையொப்பங்களை பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளதாக வசந்த அலுவிகார தெரிவித்தார். (ற)

# பரீட்சைகள்

தரம 5 புலமைப்பரிசில் பரீட்சை தகவல தொழில்நுட்பப் பொதுப பரீட்சை என்பவற்றை நடாத்துவதறகு பரீட்சைகள் திணைக்களம் ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளது.

இம்மாதம் 20ஆம் திகதி நடைபெற இருக்கும் தரம்-5 புலமைப பரிசில் பரீட்சைக்கு 3 இலட்சத்து 2 ஆயிரதது 595 மாணவர்கள் தோற்றவுள்ளார்கள்.

நாட்டிலுள்ள 2 ஆயிரத்து 614 பரீட்சை நிலையங்களில் இந்தப் பரீட்சை நடைபெறும். பரீட்சை ஆணையாளர் நாயகம் அனுர எதிரிசிங்க தகவல் தருகையில், அனுமதிப் பத்திரங்கள் உட்பட சகல ஆவணங்களும் பாடசாலைகளுக்கு ஏற்கனவே அனுபபப்பட்டுள்ளதாகத் தெரிவித்துளளார்.

இது தொடர்பில் மாணவாகள் தங்களது பாடசாலை அதிபரோடு தொடர்புகொள்வது அவசியமாகும்.

கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தர மாணவர்களுக்கான தகவல் தொழில்நுட்பப் பரீட்சை எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ளது. (அ-7)

# வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாடசாலைக் கல்வியை முடித்த இளைஞர்களுக்கு தொழில் வழிகாட்டல் செயற்திட்டம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாடசாலைக் கல்வியை முடித்துவிட்டு வெளியேறிய இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்களை வழங்குவதற்கான விசேட செயற்திட்டம் ஒனறினை மாகாணக் கல்வித் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

க.பொ.த.சாதாரண தரப் பரீடசை மற்றும் உயர்தரப் பரீட்சை என்பவற்றிற்கு தோற்றிவிட்டு மேற்படிப்பை தொடர முடியாத நிலைமையில் பாடசாலைகளை விட்டு வெளியேறும் இளைஞர், யுவதிகளின் நன்மைகருதி இநத விசேட செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வ.இராசையா அறிவித்துள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலைகளை மையமாகக் கொண்டு அதிபர், ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கபபடவுள்ளன.

வாழக்கைக்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகள், தொழில் பயிற்சிகள், இலகுவான முறையில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான ஆலோசனைகள் என்பன இளைஞர், யுவதிகளுக்கு வழங்கப்படவுள்ளன.

வடககு-கிழக்கு மாகாணத்தில் 24 கல்வி வலயப் பிரிவுகளிலும் இந்தத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளன. இது தொடர்பான ஆரம்பகட்ட செயலமர்வுகளை நடத்துவதற்காக ஒவ்வொரு கலவி வலயத்திற்கும் தலா 10ஆயிரம ரூபா வீதம் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் மேலதிக மாகாணக் கல்விப் பணிபபாளா தெரிவித்துள்ளார். (அ-9)


# கர்ப்பவதிகளுக்கான விசேட சிகிச்சை

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் தாய் சேய் நலனை மேம்படுத்தும் நோக்கில், யாழ்.போதனா வைத்திய சாலையின் மகப்பேற்று வைததிய அதிகாரிகளைக் கொண்ட குழு ஒன்று நலவாழ்வு நிறுவனததுடன் இணைந்து விசேட நடவடிக்கையில் ஈடுபடவுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளிலும் தெரிவு செய்யப்பட்ட இரு கர்ப்பவதிகள் சிகிச்சை நிலையத்திற்கு ஒவ்வொரு மாதமும் இக்குழுவினர் விஜயம் செய்து தாய், சேய் நலம தொடர்பான பிரச்சினைகள் அவற்றை ஆரம்பத்தில் இனம்கண்டு தீர்ப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நிகழும் பிரசவங்களில் மிக அதிகளவானவை யாழ்.போதனா வைத்தியசாலையிலே நடைபெற்று வருகிறது. எனவே, கர்ப்பகாலதில் ஒவ்வோர் தாயும் விசேட கவனத்துடன் கண்காணிக்கப்படவேண்டியது அவசியம். இதனைக் கருத்திற் கொண்டே பல்வேறு செயற்திட்டங்கள் நடைமுறைபபடுத்தப்பட வேண்டிய தேவையிருப்பதாக யாழ்.மாவட்ட தாய், சேய நல வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.சொலமன் தெரிவித்துள்ளார். (ற-252)



புத்தூர் ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரியின் நிறுவுநர் அமரர் மழவராயர் கந்தையா நினைவாக யாழ். மாவட்டப் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு மாணவரிடையே நடத்தப்பட்ட திருக்குறள் வினாடி வினா இறுதிப்போட்டி நிகழ்வில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் தலைமையுரை ஆற்றுவதையும், பிரதம விருந்தினர் பேராசிரியர் அ.சண்முகதாஸ், சிறப்பு விருந்தினர்கள் கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா, 'ஆவரங்கால்' சின்னத்துரை உள்ளிட்ட பிரமுகர்கள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.


# நல்லூர் ஆலயச் சூழலில்...

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ ராகவேந்திரா சுவாமிகளின் ஜனன விழாவும் 334 ஆவது ப்ருந்தாவன் ப்ரவேஷ விழாவும் நேற்று ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்நிகழ்வில் இன்று பத்மராஜின் புல்லாங்குழல் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது. (ற-9)

# இணுவிலில் மரணித்தவரின் உறவினருக்கு ஜனாதிபதியும் இராணுவமும் நிதியுதவி






கடந்த 4ஆம் திகதி இராணுவ சிப்பாயின் துப்பாக்கிச் சூட்டில் மரணித்த ஜெயசீலன் சாந்தரூபன் என்பவரின் மரணம் சம்பந்தமாக ஜனாதிபதியினால் வழஙகப்பட்ட 5 இலட்சம் ரூபா பெறுமதியான காசோலையும் 51ஆவது சேனையகத்தில் உள்ள அதிகாரிகளும், சிப்பாய்களினாலும் வழங்கப்பட்ட ஒரு இலட்சம ரூபா பணமும் யாழ். மாவட்ட பேராயரின் இல்லத்தில் வைத்து நடவடிக்கை தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் எஸ.டி.தென்னக்கோனினாலும், 51 ஆவது சேனாதிபதி பிரிகேடியர் பி. பன்னிப்பிட்டியவினாலும் மரணமடைந்தவரின் உறவினரிடம் கடந்த 9ஆம திகதி கையளிக்கப்பட்டது.

இசசந்தர்ப்பத்தில் கலந்துகொண்ட யாழ். மாவட்ட பேராயர் வணககத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம மரணமடைந்தவர் களுக்காகவும், நாட்டின் சமாதானத்திற்காகவும் பிராாத்தனை செய்து மரணித்தவர்களுக்கும, அவர்களுடைய குடும்பங்களுககும் சகல கடவுள்களிடமும ஆசிவேண்டி பிரார்த்தனை செய்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## இன்று ஒரு தகவல்

# அணுகுமுறை

அடுத்தவர்களின் மனம் புண்படாமல் நடந்து கொள்வது என்பது ஒரு தனிக்கலை. இந்த உலகில் எல்லோரும் இந்த ஒரு விடயத்தை மட்டும் சரியாகக் கடைப்பிடித்தால் போதும். எல்லோரும் சந்தோசமாக இருக்க முடியும். இதைவிடப் பெரிய கலை ஒன்று உள்ளது. அது என்ன தெரியுமா? ஒருத்தர் தவறு செய்தால் அவர் செய்த தவறை அவருக்கு நாசூக்காக சுட்டிக்காட்ட வேண்டும். அதேநேரத்தில் அவர்களுக்கு நம்மீது கோபமோ, வருத்தமோ வரக்கூடாது. இது ஒரு தனிக்கலை தான்.

சிலபேருக்கு இது கைவந்த கலையாக இருந்திருக்கிறது. அவர்கள் எல்லாம் வாழ்வில் வெற்றிகரமாக வாழ்ந்திருக்கின்றனர். சார்லஸ் ஸ்வாப் என்று ஒருவர் இருந்தார். பல இரும்பு ஆலைகளுக்கு உரிமையாளர் அவர். சிறந்த நிர்வாகி என்று பெயர் எடுத்தவர். பகலுணவு நேரத்தின் போது தொழிற்சாலையைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம் என்று புறப்பட்டார்.

அவர்பாட்டுக்கு ஒவ்வொரு இடமாகப் பார்த்துக் கொண்டு வந்தார். ஒரு இடத்தில் தொழிலாளர்கள் சிலர் இயந்திரங்களுக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டு புகைபிடித்துக் கொண்டிருந்தனர். அவர்களின் தலைக்கு மேலேயே ஒரு அறிவிப்புப் பலகை இருந்தது. அதில் என்ன எழுதியிருக்கிறது தெரியுமா? இங்கே புகைபிடிக்காதீர்கள் என்று எழுதியிருந்தது. அந்த இடத்தில் செய்யக்கூடாத ஒரு காரியத்தை அவர்கள் செய்து கொண்டிருந்தனர்.

ஆலை அதிபர் இதைப் பார்த்தார். அவர் கொஞ்சம் கூடக் கோபப்படவில்லை, கத்தவில்லை. அவர் என்ன செய்தார் தெரியுமா? தனது பையில் இருந்த விலை உயர்ந்த சுருட்டுப் பெட்டியை எடுத்தார். அதை எடுத்துப் பிரித்தார். உயர்ந்த ரக சுருட்டு அது. அங்கேயிருந்த தொழிலாளிகள் எல்லோருக்கும் கொடுத்தார். கொடுத்துவிட்டு இது மிகவும் அருமையான சுருட்டு... இதைப் புகைத்துவிட்டுச் சொல்லுங்கள். ஆனால், ஒன்று இதை நீங் கள் இங்கே நின்று செய்யவேண்டாம். வெளியே சென்று புகைத்துவிட்டு வாருங்கள் என்று கூறினார். அதன் பின்பு அவர்கள் அந்தத் தவறைச் செய்யவில்லை. நமக்கு இது போன்ற ஒரு காட்சியைப் பார்த்தால் உடனே கோபம் வந்துவிடும். அதுதான் கஸ்டம்.

பிரபலமான புகைப்படக் கலைஞர் ஒருவர் இருந்தார். பிரபலமான நடிகை ஒருவரைப் புகைப்படம் எடுப்பதற்காகச் சென்றார். படம் பிடித்து அதை பிரதிகளாக எடுத்துக்கொண்டு போய்க் கொடுத்தார். நடிகை வாங்கிப் பார்த்தார். அவருக்குச் சரியான கோபம். படம் நன்றாக இல்லையாம். நீங்கள் என்னை 5 வருடங்களுககு முன்னால் என்னைப் படமெடுத்தீர்கள் அது அழகாக இருந்தது. இது அழகாக இல்லையே என்று கத்தினார்.

புகைப்படக் கலைஞர் மனதிற்குள் நினைத்துக் கொண்டார் ''ஐந்து வருடங்களுக்கு முன்பு இவர் இளமையாக இருந்தார். அதனால் படத்திலும் அழகாக இருந்தார். இப்போது வயதாகிவிட்டது. அது யாருடைய குற்றம?'' என்று. ஆனால் அந்த நடிகையிடம் என்ன சொன்னார் தெரியுமா? ''மன்னித்துவிடுங்கள்! ஐந்து வருடங்களுக்கு முன்பு நான் இதைவிட இளமையாக இருந்தேன். இப்போது வயதாகிவிட்டது. அதனால் முன்பு போல் திறமையாக என்னால் படம்பிடிக்க முடியவில்லை என்று நினைக்கின்றேன்'' என்றார். அவ்வளவுதான் அந்த நடிகை இதை ஒப்புக்கொண்டார்.

இதுதான் நான் சொன்ன அந்தத் தனிக்கலை. ஆனால் ஒரு விடயம் இந்தக் கலையை சாமர்த்தியமாகப் பயன்படுத்துவதும் ஒரு கலை. சாமர்ததியமாகப் பயன்படுததாவிட்டால் என்ன ஆகும் தெரியுமா? எனது நண்பனுக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும்.

அவன் என்ன செய்தான் தெரியுமா? ஒருநாள் காலையில் எழுந்து உட்கார்ந்திருந்தான். மனைவி தேநீர் கொண்டு வந்து கொடுத்தார். தேநீர் நன்றாக இல்லை. இதை மனைவியின் மனம் புண்படாமல் சொல்ல வேண்டும் என்று நினைத்தான். நான் சொன்ன யோசனை நினைவுக்கு வந்தது. உடனே அதைப் பயன்படுத்தினான். எப்படித் தெரியுமா?

நீ தந்த தேநீர் நன்றாக இல்லை என்று கூறுவதற்குப் பதிலாக இதோ பார் நேற்றுக் காலையில் தெரு முனையில் உள்ள கடையில் தேநீர் குடித்தேன். மிக நன்றாக இருந்தது என்று கூறியிருக்கிறான். விளைவு என்ன தெரியுமா? அப்படியென்றால் தினமும் அங்கேயே தேநீர் குடியுங்கள் என்று கூறிவிட்டார் மனைவி.

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# நல்லூர் உற்சவ காலத்தில் கடமை புரியும் தொண்டர்கள் சிறந்த சேவையாற்றவேண்டும்

(சுதுமலை)

நல்லூர் உற்சவ காலங்களில் கடமைபுரியும் தொண்டர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் சிறந்த சேவையை வழங்குவது மிகவும் அவசியமாகும் என நல்லூர் யாழ்ப்பாணக் கோட்ட விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் செழியன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து எண்பது பேர் கொண்ட வீதிப் போக்குவரத்து அணியொன்று நல்லைக் கந்தனின் முதலாம் நாள் உற்சவத்தில் நல்லூர் மங்கையற்கரசி பாடசாலையில் சங்கத்தலைவர் இ.சற்குருநாதன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட செழியன்,

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில்,

நல்லூர் உற்சவ காலத்தில் இம்முறை பல திசைகளிலும் இருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இதனைப் பயன்படுத்தி திருடர்கள் கூட்டமாக நடமாடுகிறார்கள். எனவே தொண்டர்களின் பணி மிக மிக அவசியமாகின்றது.

இன்றைய சூழ்நிலையில் அரச படைகளோ பொலிஸாரோ இவ்விடயங்களில தலையிடுவது குறைவாகவுள்ளது. எனவே உள்வீதியிலும் வெளி வீதியிலும் தொண்டர்களின் பணி நல்ல முறையில் அமைய வேண்டும். தடை முகாம்களில் கடமைபுரியும் தொண்டர்கள் வழிஅனுமதியுள்ளவாகளைத் தவிர வேறு எவரையும் வாகனங்களுடன் அனுமதிக்கக்கூடாது. இவ் விடயங்களில் கட்டுபபடுத்த முடியாதளவு ஏதாவது பிரச்சினைகள் ஏற்பட்டால் பணிமனையில் தொடர்பு கொள்ள வேண்டும். முதல் நாள் திருவிழாவில் மட்டும் பதினைந்து பவுண் நகை களவு போயுள்ளன. இது தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இனி வரும விசேட திருவிழாக்காலங்களில் பல திருட்டுக்கள் ஏற்படும். எனவே அனைவரும் விழிப்புடன் இருப்பது அவசியம் எனவும் வலியுறுத்தினார்.

இந்நிகழ்வில் நல்லூர்ப் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு விசேட போக்குவரத்துத் தொண்டர்களுக்கு சின்னங்களை சூட்டிவைத்தார். மேலும் விசேட பயிற்சிபெற்ற 25 பெண் தொண்டர்களும் 40 விசேட முதலுதவி படையாளி தொணடர்களிற்கும் பதவி உயர்வுச் சின்னங்கள் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது. (ற-252)

### பட்டதாரிகளுக்கான நியமனம் தொடர்பில்

# வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமைக்கு ஜே.வி.பியும் பொறுப்பேற்க வேண்டும்

(கொழும்பு)

பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினைப் பெறறுக்கொடுக்கும் செயல்திட்டம் தோல்வி கண்டமை தொடர்பாக ஜே.வி.பியும் பொறுப்புக் கூற வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாஸீம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த யூன் மாதம் 15ஆம் திகதிவரை அரசாங்கம் எடுத்த அனைத்து முடிவுகளுக்கும் ஜே.வி.பியும் பொறுப்புக் கூறுவதாக சோமவன்ச அமரசிங்க தெரிவித்திருந்தார்.

அவ்வாறாயின் யூன் 15ஆம் திகதி வரை பட்டதாரிகளுக்கு நிரந்தர வேலைவாய்பபுக்கள் பெற்றுக்கொடுக்கப்படாமை தொடர்பாக ஜே.வி.பி. பொறுப்புக்கூற வேண்டும்.

அரசாங்கத்தில் இருக்கும்வரை ஜே.வி.பி. பட்டதாரிகளின் பிரச்சினை குறித்து குரல் எழுப்பவில்லை. பாராளுமன்றத்தில் விமல் வீரவன்சவிடம் வினவும்போது ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய கூறியது போன்று நாளை வழங்கப்படும். அடுத்த மாதம் வழங்கப்படும் என்றே விமல் வீரவன்சவும கூறியதாக கபீர் ஹாஸீம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இம்மாதம் முடிவடைவதற்கு முன்னர் 35ஆயிரம் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என பிரதிநிதியமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

தற்போது 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-4)

# பொதுக்கட்டமைப்பின் இடைநிறுத்தத்தினால் வடக்கு-கிழக்கு மக்களுக்கு பெரும் பாதிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலைக்குப் பின்னரான பொதுக்கட்டமைப்பு நடவடிக்கைகள் தடைப்பட்டமையானது வடக்கு-கிழக்கில் ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளை மீறும் செயலாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் பொதுக்கட்டமைப்பு தொடர்பான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்,

ஆழிப்பேரலை இணக்கத்தின் அடிப்படையில் வடக்கு-கிழக்கின் தமிழ் மக்களுக்கு பாரிய நிவாரணம் வழங்க முடிந்திருக்கும். எனினும் அது இடைநிறுத்தப்பட்டமையானது அந்த மக்களுக்கு பாரிய நம்பிக்கையின்மையினை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்பு நிர்வாகசபைக்கு ஈடானது அல்ல.இதற்கு ஜனாதிபதியும் படையினரும் தமது உடன்பாட்டை வெளியிட்டுள்ளனர். ஜே.வி. பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய ஆகியவற்றின் பிரதிநிதிகளைத் தவிர ஏனையோர் இதற்கு ஆதரவு வெளியிட்டுள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக இருக்கும் ஜனாதிபதியும் பாராளுமன்றத்தின் பெரும்பான்மைப் பலமும் ஆழிப்பேரலைப் பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவாக உள்ள போது நீதிமன்ற ஆணை பாரிய பாதிப்பை ஏற்படுத்தாது.

பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டை தடுத்ததன் மூலம் ஜே.வி.பி தமிழ் மக்களுக்கான அவசிய தேவைகளை மறுத்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (அ-9)

# இலங்கையின் மீளமைப்புக்கு தொடர்ந்தும் உதவி வழங்கப்படும்

### பில் கிளின்ரன் மீண்டும் உறுதி

(வாஷிங்டன்)

இலங்கையில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிரந்தரக் குடியிருப்புக்களை அமைத்துக் கொடுக்கும் பாரிய பணிகளுக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கவுள்ளதாக அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் மீண்டும் உறுதியளித்துள்ளார்.

சுனாமி நிவாரண புனர்வாழ்வு, புனர்நிர்மாணப பணிகளின் முன்னேற்றம் பற்றி தென்னிலங்கை ஊடகம் ஒன்றின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்தின் விசேட தூதுவராக சுனாமிப் புனர்வாழ்வுப் பணிகளினை முன்னெடுத்துச்செல்லும் போது இலங்கைக்கும் உதவிகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)

# கப்பல் தடுத்து வைப்பு பாதுகாப்பு தரப்பு மறுப்பு

கொழும்புத் துறைமுகத்துக்கு வந்துள்ள கப்பல் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளியான தகவலை பாதுகாப்பு தரப்பு மறுத்துள்ளது.

அதிகளவான ஆயுதங்களுடன் இந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்த போது தடுத்து வைக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இது வங்களா தேசத்திற்கு முல்லைத்தீவு கடல் வழியாக செல்வதற்கு இருந்தமையால் அதனை துறைமுகத்துக்குள் கொண்டு வந்து பரிசிக்க படைத்தரப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

எனினும் சிங்கப்பூருக்கு சொந்தமான இக்கப்பலுக்குள் இருந்த ஆயுதங்கள் ஒரு நாட்டிற்கு உரியது என்றும் இவ்வாறான கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்திற்கு வந்து செல்வது சாதாரணமென றும் தெரிய வந்துள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-9)

# பாவலரின் சிந்தனையோட்டங்களை படம்பிடித்துக் காட்டும் நூல்

யாழ். பல்கலைக்கழகம், இராமநாதன் கல்லூரி ஆகிய இரண்டு கல்விக் கூடங்களும் சேர் பொன் இராமநாதனின் ஞாபகச் சின்னங்களாக விளங்குவது போல தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பாவலர் தெ.அ.துரையப்பா பிள்ளையின் ஞாபகச் சின்னமாகத் திகழ்வது உலகறிந்த உண்மை.


பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை

தமிழீழத்தின் மூத்த தமிழ் கவிஞரான இவர் மகாகவி பாரதியாரின் சம காலத்தவர். பாரதியாரின் காலம் 1882-1921. பாவலரின் காலம் 1872-1929.

எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், பொது மக்கள் விரும்பும் மெட்டு எனப் பாரதி கூறிய கவிதைப் பண்புகள் பாவலரின் பாடல்களில் பொருந்தியிருப்பதை நம்மவர்கள் கூட அறியாதிருப்பது வேதனைக்குரியது.

"பாரதியார் தான் முதன்முதல் சாதாரண மக்களின் சமூக வாழ்வைக் கவிதையில் கொண்டு வந்தவன்" என்று நிலவும் கருத்து மீளாய்வு செய்யப்பட வேண்டுமென்ற நிலையைப் பாவலரது கவிதைகள் ஏற்படுத்தியுள்ளமை அவதானிக்கபாலது.

**நூல்: சிந்தனைச் சோலை**
**ஆசிரியர் : பாவலர் தெ.அ.துரையப்பாபிள்ளை**
**விலை: 400/=**

சாதி மதபேதங்கள், சீதனக் கொடுமை முதலியவற்றையும் கண்டிக்க பாவலர் தவறவில்லை.

மிக்க பெருந்தொகைச் சீதனமில்லாது
மேதினியில் மண வாழ்விலராய்
துக்க முறும் பெண்கள் யாழ்ப்பாண நாட்டிற்
தொகையாயிருக்கிறார் சங்கமின்னே

## திறனாய்வுக்களம்

அறுபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட பாவலரது பாடல்களை தேடியெடுத்து 'சிந்தனைச் சோலை' என்ற பெயரில் வெளியிட்டதன் மூலம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உலகப் பழைய மாணவர் சங்கம் தமிழ் கூறும் நல்லுலகுக்குப் பெருஞ் சேவையாற்றியுள்ளது.

மூடக் கொள்கைகள், மூடப் பழக்கவழக்கங்கள் மூடிக் கிடந்த அந்தக் காலத்திலே தன்னந்தனியனாக சீர்த்திருத்தக் கொள்கைகளை கண்டித்த பெருமை பாவலருக்குரியது.

வாலிபர் பெரியோரை ஏசுகிறார் - அவர்க்கு
மரியாதை செய்திடக் கூசுகிறார்
போலி நியாயங்கள் பேசுகிறார் - சொல்லும்
புத்தி களையப்பால் வீசுகிறார்

என்ற அவரது கவிதை இக்கால வாலிபர்களும் அக்கால வாலிபர்களுக்கு குறைநதவர்கள் அல்லர் என்றே எணண வைக்கிறது.

ஆண்டவன் பெயரில் ஆலயங்களில் நடக்கும முறை தவறிய மிருகப்பலி சைவ நெறிக்கே மாசுண்டாக்கும் செயல் என்பதை

ஆடு கோழி வெட்டும் துர்வழக்கம் - பல
ஆலயங்களிலே மிகுமுழக்கம்
ஈடில்லா அக் கொலைப் பழக்கம் - செய்யும்
ஈனர்க்குண்டோ சைவமெய் விளக்கம்

மதுபான மென்னுமம் மாநஞ்சை நம்தேச
மாந்தர்முற் றாய்நீக்க லின்றியதை
அதிகமா யின்னும் பருகுங் கொடுமை
அறைதற் கரிதடி சங்கமின்னே

கள்ளொடு சாராயம் விஸ்கி விறண்டி
கழறும்ஜின் பீர்அபின் கஞ்சாவென
விள்ளும்பல் மஸ்துப்பா ணங்களை நம்மவர்
வேண்டியே நிற்கிறா சங்கமின்னே

இந்த விதத்தில் பாரதியார் கூறிய பல புரட்சிக் கருத்துக்களை பாவலரும் கூறியுள்ள போதிலும் பாரதிக்னுக் கொடுக்கப்பட்ட மதிப்பும் கணிப்பும் இவர் பால் காட்டப்பட்டிருநதால் இன்று இவர் புகழ் தமிழ் மக்கள் வாழும் இடங்களிலெல்லாம் பரவியிருக்குமென்பதில் ஐயமில்லை.

**.தராசு**

'சிந்தனைச் சோலை' என்ற இந்நூல் பாவலர் சிந்தனையோட்டங்களை படம்பிடித்துக்காட்டும் காலக் கண்ணாடி.

பல கோணங்களில் ஆய்வு செய்யப்பட வேண்டிய இந்நூல், வருங்காலத்திலாவது அதற்குரிய இடத்தை பெறும் பெறவேண்டும் என எதிர்பார்ப்போம். □

# போட்டிப் பரீட்சை மூலம் தொழில்நுட்பவியலாளர் தெரிவு

(கொழும்பு)

மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் என்பவற்றில் தற்போது நிலவும் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் இலங்கை தொழில்நுட்ப சேவை இரண்டாம் வகுப்பின் 'ஆ' பிரிவிற்கு புதிதாக உத்தியோகத்தர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக அமைச்சின் செயலாளர் திஸநாயக்க அறிவித்துள்ளார்.

பரீட்சைத் திணைக்களத்தினால் நடத்தப்படும் போட்டிப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிபபடையில் நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளில் கொழும்பில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது. க.பொ.த சாதாரண பரீட்சையில் 2 தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் தாய்மொழி, கணிதம், விஞ்ஞானம் உட்பட 4 பாடங்களில் திறமைச் சித்தியுடன் மொத்தம் 6 பாடங்களில் சித்தியடைந்து தொழில்நுட்ப ரீதியிலான தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்க முடியும் என்று அறிவிக்கபபட்டுள்ளது.

இத்தொழில்நுட்பப் போட்டிப் பரீட்சைக்கு தோற்ற விரும்பும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை திணைக்களத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் கோரியுள்ளார். (அ-9)

# ஆடம்பரப் பொருட்கள் மீதான வற்வரி 20 % ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

ஆடம்பர பொருட்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 18 சதவீத வற் வரி கடந்த 2ஆம் திகதி முதல் 20 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மோட்டார் வாகனங்கள், தொலைக்காட்சி, வானொலி, வீடியோ உபகரணங்கள், புகைப்பட உபகரணங்கள், குளிரூட்டி, சலவை இயந்திரம், மணிக்கூடு, மதுபானங்கள், விளையாட்டு உபகரணங்கள், இசைக் கருவிகள், ஆபரணங்கள், மென்பானங்கள், குளிர்சாதனப் பெட்டிகள் உட்பட 20 பொருட்கள் மீதான வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகனங்களுக்கான வற் வரி அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் துவிச்சக்கர வண்டி, முச்சக்கரவண்டி, லொறி, ட்றக, பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மற்றும் பயணிகள் போக்குவரத்து வாகனங்களுக்கான வற வரி அதிகரிக்கப்படமாட்டாதெனத் தெரிவிக்கப்படுகிறது.

அதுதவிர ஹோட்டல்கள் மற்றும் விடுதிகளில் நடைபெறும் வைபவங்களுக்கென விதக்கப்படும் வற் வரியும் அதிகரிக்கபபட்டுள்ளது.

வரவு செலவுத் திட்டத்தில் ஆடம்பரப் பொருட்களுக்கு 18 சதவீத வற் வரி விதிக்கப்பட்டிருந்த போதிலும் கடந்த 2ஆம் திகதி முதல் மேலும் 2 சதவீத வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஜே.வி.பியின் கருத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

கூட்டமைப்பு அரசாங்கத்திலிருக்கின்ற கட்சிகள் இனப்பிரச்சினை தொடர்பான பல்வேறு நோக்கங்களையும், கருத்துக்களையும் கொணடுள்ளதாக அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சுனாமி நிவாரண முகாமைத்துவக் கட்டமைப்பு தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்ற ஒத்திவைப்பு வவாதத்தின் போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி அரசிலிருந்து விலகியது அதன கொள்கைகள், அதன் நோக்கங்களுடன் தொடர்புடைய பரஸ்பர விடயங்களுக்காகவே.

ஜே.வி.பியினரின் கருத்தின் அடிப்படையில் இனப்பிரச்சினைக்கு ஒரு போதும் இறுதித் தீர்வு ஒன்றினைக் காணமுடியாது. சுனாமிக்குப் பின்னரான முகாமைத்துவக் கட்டமைப்பின் மூலம் வடக்கு -கிழக்கில் சுனாமி அனர்த்தததினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முழுமையான நிவாரணங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஒஸ்லோ மற்றும் டோக்கியோ பிரகடனங்களுக்கு அமைய எந்தவொரு செயற்திட்டத்துக்கும் ஒத்துழைப்பு வழங்குவதே தமது கட்சியின் நிலைப்பாடு என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரிய தெரிவித்துள்ளார். (ற-4)

# 19ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்த கிழமை நிரந்தர நியமனம்

(கொழும்பு)

42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்த மாதத்தில் நிரந்தர நியமனங்களை வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஏற்கனவே பயிலுநர்களாக அரசாங்க சேவையில் இவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். இதில் ஏற்கனவே 12 ஆயிரம் பேர் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார்கள்.

அத்துடன் 19 ஆயிரம் பேருக்கு அடுத்த் கிழமை கல்விச் சேவையில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் செயலர் பி.வி.ஜெயசுந்தர கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளா மாநாட்டில் தெரிவித்தார். (அ-9)

# 'பீ.சீ.ஜீ தடுப்பூசி ஏற்றல்' குறித்து இன்று விசேட பயிற்சி

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள கிராமிய மகப்பேற்று வைத்தியசாலைகளில் கடமை புரியும் குடும்ப நலசேவை உத்தியோகத்தர்களிற்கு பீ.சீ.ஜீ தடுப்பூசி குழந்தைகளிற்கு ஏற்றுவது தொடர்பான விசேட பயிற்சி ஒன்று இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு சுகாதார சேவைகள் பிரதி மகாகாணப் பணிபபாளர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மார்பு நோய் சிகிச்சைப்பிரிவு வைத்திய அதிகாரிகள் இந்த பயிற்சிக் கருத்தரங்கை நடாத்த உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தை பிறந்ததினமே ஏற்றப்படும் இத் தடுப்பூசியின் முக்கியத்துவத்தை விளக்கும் வகையில் இவ்விசேட பயிற்சி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-252)

# பாலர் கணிதம் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)



கலாபூஷணம் சு.துரைசிங்கத்தால் எழுதப்பட்ட பாலர் கணிதம் செயல் நூலின் அறிமுகவிழா எதிர்வரும் திங்கட்கிழமை மு.ப.10மணிக்கு யாழ்.இராமநாதன் கல்லூரி பிரதான மண்டபத்தில் வலிமேற்கு சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் இ.அரிகரன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவின் பிரதமவிருந்தினராக யாழ்.மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் சூ.ஜெயராஜும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாவட்ட முன்பள்ளி இணைப்பாளர் செல்வி கு.அன்சலீனினும், வலிகாம வலயம் முன்பள்ளி இணைப்பாளர் திருமதி யோ.நளினியும் கலந்துகொள்வார்கள். (து)

# இராணுவத்தினரின் போக்கையே அரசாங்கமும் கடைப்பிடிக்கிறது

## மட்டு.அரசியல்துறைப் பொறுப்பாளர் இளந்திரையன்

(மட்டக்களப்பு)

இராணுவத்தினரும், அவர்களோடு சேர்ந்து இயங்கும் தேசவிரோதக் கும்பல்களுமே தொடர்ந்து இடம்பெற்று வரும் வன்முறைகளுக்கு காரணமாகும்.

இராணுவத்தினரின் முகாம்களிலிருந்து செயற்படும் தேசவிரோதக் கும்பல்களின் நடவடிக்கைகள் சமாதானத்திற்குக் குந்தமாக அமைவதோடு, பாரதூரமான விளைவுகளையும் ஏற்படுததி வருகின்றன என தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளந்திரையன் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த கண்காணிப்புக்குழுக் குழுவின் தலைவர் ஹக்ரூப் ஹொக்லன்டுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற சந்திப்புக்குப் பின் செய்தியாளர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே மேலும் அவா இதனைத் தெரிவித்தாா.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் அணமைக்காலமாக இடம்பெற்று வரும் சம்பவம் தொடர்பாக எமது நிலைப்பாட்டினை அவர்களுக்கு விளக்கினோம். அண்மைக் காலமாக படைத்தரப்பினா கடைப்பிடித்து வருகின்ற விறைப்பான போக்கையே அரசாங்கமும் கடைப்பிடித்து வருகின்றது. யுத்த நிறுத்தத்தை தொடர்வதற்கு சாதகமற்ற சூழ்நிலைகளை அரசாங்கமும் படைத்தரப்பும் திணித்துக் கொண்டிருக்கின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் மக்களுக்கு அதிருப்தியையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் சில வன்முறைச் சம்பவங்களில் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்புகள் இருப்பதாக இராணுவத்திலிருந்து வரும குற்றச்சாட்டுகள் உண்மையற்றவை.

சம்பவங்கள் எங்கே இடம்பெறுகின்றன. சம்பவத்தினால் பாதிக்கப்படுபவர்கள் யார் என்பதையும பார்க்கும்போது இவ் உண்மை விளங்கும்.

சமாதானத்திற்காக கௌசல்யன், சேனாதி எனப் பல போராளிகளை விலை கொடுத்தோம். தொடர்ந்தும் கொடுத்துக் கொண்டிருக்கின்றோம். தேசவிரோதக் கும்பல் இயங்குவதையும் தாக்குதல் நடத்திவிட்டு படைமுகாம்களுக்கு தப்பிச் செல்வதையும் மக்கள் கண்ணுற்றார்கள். இதனை விடுதலைப் புலிகளும் அவதானித்திருக்கின்றார்கள். உண்மை நிலை இவ்வாறிருக்க விடுதலைப்புலிகள் மீது பழிசுமத்துவது முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பது போன்றது. இப் படைகள் இல்லாதுவிட்டால் இவ்வாறான தாக்குதல்கள் நடைபெறுவதற்கு இடமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ற-4)


# கண்ணீர்ப் பூக்கள் நூல் வெளியீட்டு விழா


(யாழ்ப்பாணம்)

கவிஞர் யாழ்.ஆன்சிலினின் கண்ணீர்ப் பயணங்கள் பாகம் ஒன்று - பாகம் இரண்டு நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 19ஆம திகதி காலை 10.00 மணிக்கு யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச்சங்க கேட்போர் கூடத்தில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் வரவேற்புரையை சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் பொறுப்பாளர் கண்ணனும், அறிமுக உரையை யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியும், மதிப்பீட்டுரையை கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முதுநிலை விரிவுரையாளர் முனைவர் செல்லையா திருநாவுக்கரசும், பலாலி ஆசிரியர் கலாசாலையின் முன்னைநாள் அதிபர் கவிஞர் சோ.பத்மநாதனும், வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் சி.சிவலிங்கராஜாவும் நிகழ்த்தவுள்ளார்கள்.

நூல் வெளியீட்டினை, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நடராசா ரவிராஜ், பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரும் நன்றியுரையை உயரப்புலம் மகாவித்தியாலய ஆசிரியர் சி.இளங்கோவும் நிகழ்த்தவுள்ளனர். (அ-19)






உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ்ப்பாணம் சுப்பிரமணியம் பூங்காவிற்கு அருகாமையில் நீதிமன்ற வளாகத்தினுள் புதிதாக அமைக்கப்பட்டுவரும் நீதிமன்றத்தினை படங்களில் காணலாம். இவ் வளாகத்திலிருந்த நீதிமன்ற பழைய கட்டடம் யுத்தத்தினால் முழுமையாக அழிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இந் நீதிமன்ற கட்டட வேலைகள் யாவும இவ்வருடத்துள் முடிக்கப்பட்டு அடுத்த வருட முற்பகுதியில் இந் நீதிமன்றத் திறப்பு விழா நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

(படங்கள்:ஞா.ஐங்கரன்)







யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச் சங்கததின் விசேட முதலுதவிப் படையின் சின்னம் சூட்டுவிழா கடந்த புதன்கிழமை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி தெய்வேந்திரம், நல்லூர் அரசியல்துறைப் பொறுப்பாளா செழியன் ஆகியோர் முதலுதவிப்படையினருக்கு சின்னம் சூட்டுவதையும், நிகழ்வில் கலந்துகொண்ட முதலுதவிப் படையினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: ஞா.ஐங்கரன்)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவகாலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றத்தினர் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்திவரும் தெய்வீக இசையரங்கின் நான்காம் நாள் நிகழ்வாக இன்று எஸ்.ஞானசொருபனின இசைக்கச்சேரி நடைபெறவுள்ளது.

அணிசெய் கலைஞர்களாக வயலின் வி.மதுரா, மிருதங்கம் கே.அனந்தகோபன், கெஞ்சிரா என்.மாதவன் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (அ-19)

# மாவட்ட தடகள போட்டி முடிவுகள்

*(நேற்றைய தொடர்ச்சி....)*

**பெண்கள் பிரிவு**

**10000 மீற்றர் ஓட்டம்**

1.எஸ்.பவிலாதினி (கோப்பாய்)
2.ரி.ரோபினா (நல்லூர்)

**100 மீற்றர் ஓட்டம்**

1.என்.சிறிவித்தியா (சங்கானை) (புதிய சாதனை)
2.அனற் றிசாரினி (சண்டிலிப்பாய்)
3.என்.மயூரி (கரவெட்டி)

**400 மீற்றர் ஓட்டம்**

1.என்.சிறிவித்தியா (சங்கானை)
2.வி.மயூரி (சாவகச்சேரி)
3.ஆர்.பிரேமலட்சுமி (நெடுந்தீவு)

**உயரம் பாய்தல்**

1.வி.கஜீதா (யாழ்ப்பாணம்)
2.அனற் றிசாரினி (சண்டிலிப்பாய்)
3.எஸ்.சுகாஜினி (உடுவில்)

**முப்பாய்ச்சல்**

1.ரி.வாசுகி (யாழ்ப்பாணம்) (புதிய சாதனை)
2.ஐ.றொசானி (சண்டிலிப்பாய்)
3.வி.சுஜீதா (யாழ்ப்பாணம்)

**400 மீற்றர் தடை தாண்டல்**

1.எஸ்.தயாளினி (பருத்தித்துறை)
2.ரி.வாசுகி (யாழ்ப்பாணம்)
3.த.பிரேமலட்சுமி (நெடுந்தீவு)

**குண்டெறிதல்**

1.கே.தர்சினி (யாழ்ப்பாணம்)(புதியசாதனை)
2.என்.கருணகலாதேவி (நெடுந்தீவு)
3.கே.கீர்த்தனா (தெல்லிப்பழை)

**நீளம்பாய்தல்**

1.ரி.வாசுகி (யாழ்ப்பாணம்)
2.ஐ.றொசானி (சண்டிலிப்பாய்)
3.எஸ்.சுபாஜினி (உடுவில்)

**800 மீற்றர் ஓட்டம்**

1.ஐ.அனுசியா (சாவகச்சேரி)
2.எஸ்.அனுஷா (சண்டிலிப்பாய்)
3.பி.யசோதினி (சாவகச்சேரி)

**5000 மீற்றர் ஓட்டம்**

1.ஐ.அனுசிகா (சாவகச்சேரி) (புதியசாதனை)
2.எஸ்.அனுசா (சண்டிலிப்பாய்)
3.என்.சுமதி (சண்டிலிப்பாய்)

**200 மீற்றர் ஓட்டம்**

1.என்.சிறிவித்தியா (சங்கானை) (புதியசாதனை)
2.என்.மயூரி (கரவெட்டி)
3.வி.மயூரி (சாவகச்சேரி)

**பரிதி வட்டம் வீசுதல்**

1.என்.கருணகலாதேவி (நெடுந்தீவு) (புதியசாதனை)
2.கே.தர்சினி (யாழ்ப்பாணம்)
3.கே.சேதுப்பிரியா (தெல்லிப்பழை)

**100 மீற்றர் தடைதாண்டல்**

1.எஸ்.தயாளினி (பருத்தித்துறை)
2.எஸ்.கிருசாந்தினி (சண்டிலிப்பாய்)
3.அனற் றிசாரினி (உடுவில்)

**1500 மீற்றர் ஓட்டம்**

1.ஐ.அனுசியா (சாவகச்சேரி)
2.ஜே.பவானி (சங்கானை)
3.எஸ்.அனுசா (சண்டிலிப்பாய்)

**ஈட்டியெறிதல்**

1.கே.சேதுப்பிரியா (தெல்லிப்பழை)
2.என்.கருணகலாதேவி (நெடுந்தீவு)
3.ஏ.நித்தியா (சண்டிலிப்பாய்)

**4X100 அஞ்சல் ஓட்டம்**

1.சண்டிலிப்பாய்
2.சாவகச்சேரி
3.யாழ்ப்பாணம்

**4X400 அஞ்சல் ஓட்டம்**

1.யாழ்ப்பாணம் 2.தெல்லிப்பளை
3.சாவகச்சேரி (அ-19,68)

# முன்னணி வீரர்கள் பலர் கால் இறுதிக்குத் தகுதி

(யாழ்ப்பாணம்)

கனடாவில் நடைபெற்றுவரும் டெனிஸ் மாஸ்ரர் ஆடவர் ஒற்றயர் போட்டியில் மூன்றாம் சுற்றுப்போட்டிகளில் பல முன்னணி வீராகள் வெற்றி பெற்றுள்ளனர்.

ஸ்பெயினின் ரக்ஷல் மெடால், ஆஜன்ரீனாவின் கெஸ்ரின் கௌடியோ, அமெரிக்காவின் அன்ரு அகாசி, சிலோவாக்கியாவின் டொமனிக்கபடின், பிரிட்டனின் கிரேக் ரிசப்றி ஆகியோர் கால் இறுதிக்குத் தகுதிபெற்றுள்ளார்கள்.

இதேவேளை ஏசியாவின் நிக்கலோ எடவிடன்கோ, குரோசியாவின் மரி அன்சிக், பிரானசின் செபஸ்ரின் குரோன்சின், ஸ்பெயினின் றொபேற்றோ, ஜேர்மனின் நிக்கலாஸ் கீப்பர் போன்ற முன்னணி வீரர்கள் மூன்றாம் சுற்றுடன் வெளியேறினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-19)

# சமாதான உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

சென் பற்றிக்ஸ் கல்லூரியினால் ஏற்பாடு செய்யப்பட்ட கொழுமபு, மன்னார் அணிகள் உட்பட ஏழு கல்லூரி அணிகள் கலந்து கொள்ளும் சமாதானக் கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டப் போட்டி இம் மாதம் 17ஆம், 18ஆம்,19ஆம் திகதிகளில் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி புதன்கிழமை யாழ்ப்பாணக் கல்லூரியை எதிர்த்து சென் ஹென்றிஸ் கல்லூரியும், சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரியும், சென் பீற்றர்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஜோன்ஸ் கல்லூரியும், சென் சேவியர்ஸ் கல்லூரியை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்லூரியும், சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் ஜோன்ஸ் கல்லூரியும், ஹாட்லிக் கல்லூரியை எதிர்த்து சென் பீற்றர்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை சென் ஹென்றிஸ் கல்லூரியை எதிர்த்து சென சேவியர்ஸ் கல்லூரியும், சென் ஜோன்ஸ் கல்லூரியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரியும், சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து சென் பீற்றர்ஸ் கல்லூரியும் மோதவுள்ளன. அன்றையதினமே அரை இறுதி ஆட்டமும் இடமபெறும்.

எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை மூன்றாம் இடத்திற்கான ஆட்டமும் இறுதி ஆட்டமும் நடைபெறும். (து-19)

## விளையாட்டுச் செய்திகள்

# அவுஸ்திரேலிய சுழல் பந்துவீச்சாளர் ஷேன் வோர்ன் புதிய சாதனை

(யாழ்ப்பாணம்)



டெஸ்ட் கிரிக்கெற் போட்டிகளில் 600 விக்கெற்றுக்கள் என்ற மைக்கல்லை அவுஸ்திரேலிய அணியின் சுழல்பந்து வீச்சாளர் ஷேன்வோன் கடந்து புதிய சாதனை புரிந்துள்ளார்.

இதன்மூலம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் ஆகக்கூடுதலான விக்கெற்றுக்களைக கைப்பற்றிய டெஸ்ட் வீரர் என்ற பெருமையை இவர் பெற்றுள்ளார்.


இங்கிலாந்தின் மான்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராபோர்டு அரங்கில் நேற்றுமுன்தினம் நடந்த ஆஷஸ் தொடரின் மூன்றாம் டெஸ்ட் போட்டியின் போதே இங்கிலாந்து வீரர் ரெஸ்கோதிக்கின் விக்கெற்றைக் கைப்பற்றி இச் சாதனையைப் புரிந்துள்ளார்.

இவருக்கு அடுத்த சாதனை நிலையில் இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 549 விக்கெற்றுக்களைக் கைப்பற்றியுள்ளார்.

இவரைத் தொடர்ந்து மேற்கிந்தியத் தீவுகள் அணியைச் சேர்ந்த கொட்னி வோலஷ 519 விக்கெற்றுக்களையும், அவுஸ்திரேலிய வீரர் மெக்ராத் 508 விக்கெற்றுக்களையும், இந்திய வீரர்களான அனில் கும்ளே 461 விக்கெற்றுக்களையும் கபில்தேவ் 434 விக்கெற்றுக்களையும் கைப்பற்றியுள்ளார்கள். (து-19)

# ஐ.நா பாதுகாப்புச் சபை விஸ்தரிப்பு டிசம்பரில்!

## கொபி அனான்



(நியூயோர்க்)

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விஸ்தரிப்பு நடவடிக்கைகள எதிர்வரும் டிசம்பர் மாதத்திலேயே இடம்பெறுமென அதன் செயலாளர் நாயகம் கொபி அனான் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை விஸ்தரிப்பு குறித்து கொபி அனான் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

1945ஆம் ஆண்டிலிருந்த அரசியல் சூழ் நிலையைக் கருத்திற் கொண்டு ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை 15 அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் அமைப்பாக உருவாக்கப்பட்டிருந்தது. தற்சமயம் 21ஆம் நுற்றாண்டில் உலக நாடுகளின் அபிவிருத்தி, பாதுகாப்பு, மனித உரிமைகள், பொதுச் சபையின் முகாமைத்துவம் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு பாதுகாப்புச் சபை விஸ்தரிப்பு அவசியமாகியுளளது என்று குறிப்பிட்டார்.

யுத்தம், சமாதானம், பொருளாதாரக் கட்டுப்பாடுகள், சமாதான நடவடிக்கைகள் சம்பந்தான பாதுகாப்புச் சபைத் தீர்மானங்களை மேற்கொண்டு வருகின்றது.

பாதுகாப்புச் சபை விஸ்தரிக்கப்படும் போது ஜப்பான், ஜேர்மனி, பிரேசில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளும் பாதுகாப்புச் சபையில் நிரந்தர உறுப்புரிமையைக் கோரியிருந்தன. எனினும் 53 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட ஆபிரிக்க யூனியன் இதற்கு ஆதரவு தெரிவிக்காததனால் இந்த நாடுகளின் நடவடிக்கைகள் பின்னடைவு கண்டுள்ளன.

இந்நிலையில், ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையை விஸ்தரிக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடைபெறமாடடாது எனறும் இவ் விஸ்தரிப்பு டிசம்பரிலேயே மேற்கொள்ளப்படும் என்றும் கொபி அனான் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ந)

WORLD NEWS உலக தரிசனம்

## —உலக சந்தையில்—

# மசகு எண்ணெயின் விலை அதிகரிப்பு

(வோஷிங்டன்)

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை மேலும் அதிகரித்துள்ளது.

அமெரிக்காவில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 65 டொலரை எட்டியுள்ளது. பிரிட்டனில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெயின் விலை 64 டொலரை தாண்டியுள்ளது.

இவ் விலை உயர்வானது, முன்னைய விலை மட்டத்தைவிட 2 டொலர்கள் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அமெரிக்க அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையைத் தொடர்ந்தே இவ் விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

கோடை காலத்தில் எண்ணெய்க்கான தேவை அதிகரிக்கக் கூடும். இச் சூழ்நிலையில் அதிகரிப்பு நிலையங்களிலும் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய அளவு எண்ணெய் உற்பததி செய்ய முடியாமல் போகலாம் என அமெரிகக அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்தே மசகு எண்ணெயின் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# அணுசக்தி ஏவுகணைப் பரிசோதனை பாக்.வெற்றிகரச் சோதனை!

(இஸ்லாமாபாத்)

தரையிலிருந்து ஏவக்கூடிய அணுசக்தி ஏவுகணை ஒன்றை பாகிஸ்தான் கடந்த புதன் கிழமை வெற்றிகரமாகச் சோதித்துள்ளது.

இவ் அணு ஏவுகணையானது சுமார் 500 கிலோ மீற்றர் தொலைவை இலக்கு வைத்துத் தாக்ககூடியது என்று பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக பாகிஸ்தான் அணு ஆயுத மற்றும் ஏவுகணைப் பரிசோதனைகள் குறித்து இந்தியாவுடன் பரஸ்பர தகவல்களை பரிமாறிக கொள்வதற்கான உடன்பாடு ஒன்றிற்கு வந்திருந்தது.

எனினும் 'பாபூர்' எனும் பரிசோதிக்கபட்ட இவ் ஏவுகணை குறித்த தகவல்கள் எதுவும் இவ் உடன்பாட்டில் உள்ளடக்கப்படவில்லை என்று பாகிஸ்தான் இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த விடயங்கள் குறித்து தமது அயல்நாடுகளுக்கு தாம் அறிவிக்கவேண்டிய தேவை ஏதுமில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை அணு வல்லமை பொருந்திய, தரையிலிருந்து ஏவக்கூடிய இந்த 'பாபூர்' ஏவுகணை 'ராடார்' திரைகளை மீறிச் செயற்படக்கூடிய ஒன்று என இராணுவ அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து அணு சக்தி மிக்க ஏவுகணை வசதிகொண்ட நாடுகளின் பட்டியலில் பாகிஸ்தானும இடம்பிடித்துளளது.

முன்னதாக 1998ஆம் ஆண்டு இந்தியாவும இவ்வாறானதொரு அணுப் பரிசோதனை ஒன்றை மேற்கொணடிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந)

# ஈரானின் புதிய ஜனாதிபதி அமெரிக்கா வர அனுமதி

(வோஷிங்டன்)

நியூயோர்க்கில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ள ஈரானின் புதிய ஜனாதிபதிக்கு வீஸா வழங்கபபடுமென அமெரிகக அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.

1979ஆம் ஆண்டு தெஹிரானில் உள்ள அமெரிக்கத் தூதரகம் முற்றுகையிடப்பட்ட சம்பவத்துடன் ஈரானின் புதிய ஜனாதிபதி மஹ்ரூப் அகமத்திற்கு முக்கிய பங்கு இருந்த தாகக் கூறப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஈரான் அதிபர் நியூயோர்க் வருவதற்கு அனுமதி வழங்கியிருப்பதன் மூலம் இது விடயத்தில் அமெரிக்க அதிா ஜோர்ஜ டபிள்யூ புஷ் அக்கறை கொள்ளவில்லையெனத தெரிய வருகிறது. (ந)

# காஸாவிலிருந்து யூதர்கள் வெளியேற்றப்படினும் ஆயுதங்களை கீழே போட முடியாது

## கமாஸ் அறிவிப்பு

(காஸா)

காஸா பள்ளத்தாக்கிலிருந்து யூதக் குடியிருப்புக்கள் அப்புறப்படுத்தப்பட்டாலும் கூட ஆயுதங்களைத் தாம் கீழே வைக்கப்போவதில்லையென பலஸ்தீன கமாஸ் இயக்கம் அறிவித்துள்ளது.

ஆக்கிரமிக்கப்பட்ட கூடுதலான இடங்களிலிருந்து வெளியேறுமாறு இஸ்ரேலை தாம் நிர்ப்பந்திக்க முடியுமெனவும் கமாஸ் இயக்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக்கள் இஸ்ரேலுக்கு பெரும் சவால் விடுப்பதாக அமைந்துள்ளன.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் எதிர்வரும் 17ஆம் திகதி காஸா பள்ளத்தாக்கிலிருந்து யூதர்களை வெளியேற்றும் திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

# இன ரீதியான தாக்குதல்கள் இலண்டனில் அதிகரிப்பு

(இலண்டன்)

இலண்டன் வெடிகுண்டு தாக்குதலுககுப் பின் இன ரீதியான தாக்குதல்கள் அதிகரித்து விட்டன. இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் மீது பயங்கர கல்வீச்சு நடந்தது. படுகாயமடைந்த டாக்டர் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இலண்டனில் கடந்த மாதம் 7ஆம் திகதி மற்றும் 21ஆம் திகதியில் பயங்கர வெடிகுண்டுத் தாக்குதல் நடந்தது. தீவிரவாதிகள் பலர் கைது செய்யப்பட்டனர். அவர்கள் முஸ்லிம்கள் என்பதால் இலண்டனில் வசிக்கும் மற்ற முஸ்லிம்கள் மீது வெள்ளை இனத்தவர்கள் கடும் தாக்குதல் நடத்தினர். மசூதிகளுக்கு தீ வைக்கப்பட்டது சீக்கியர்களும் முஸ்லிம்களைப் போலவே தோற்றத்துடன் இருப்பதால் அவர்கள் மீதும் குருத்வாரா மீதும் தாக்குதல் நடந்தது.

இன ரீதியான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த பிரிட்டன் பொலிஸார் கடும் நடவடிக்கைகள் எடுத்து வருகின்றனர். எனினும் பிரிட்டனில் தென்கிழக்கில் சாத்தம் என்ற பகுதியில் இநதிய வம்சாவளியைச் சேர்ந்த டாக்டர் ஒருவர் மீது நேற்று முன்தினம் வெள்ளையின இளைஞர்கள கடும் தாக்குதல் நடத்தினர். யாஷன் மகராஜ (28) என்ற டாக்டர் மீது கல் வீச்சு நடத்தியதில் அவர் படுகாயமடைந்தார். உடனடியாக அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

டாக்டரை மிகக் கேவலமான முறையில் திட்டிய வெள்ளையின இளைஞர்கள் பெரிய பெரிய கற்கள் மூலம் தாக்கியுள்ளனர் என்று மருத்துவமனை நிர்வாகத்தினர் கூறினர். (ந)

# திங்களன்று இந்திய சுதந்திரதினம் நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு

(புதுடில்லி)

எதிர்வரும் 15ஆம் திகதி இந்தியா முழுவதும் சுதந்திரதினம் வெகு சிறப்பாக கொண்டாடப்படவுள்ளது.

புதுடில்லி செங்கோட்டையில் பிரதமர் மன்மோகன்சிங் தேசியக் கொடி ஏற்றி வைத்து சுதந்திரதின உரையாற்றவுள்ளார். அந்நிகழ்வில் அரசியல தலைவர்கள், கட்சிப் பிரமுகர்கள் உட்பட மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சுதந்திர தின நிகழ்வையொட்டி இந்தியா முழுவதும் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

புதுடில்லி செங்கோட்டையைச் சுற்றிலும் வரலாறு காணாத வகையில் பலத்த பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதுடன் சுதந்திர தினத்தன்று செங்கோட்டைக்கு மேலாக விமானங்கள் பறப்பதற்கும் தடை விதிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்றுக் காலை புதுடில்லிக்கு அருகே துப்பாக்கித் தோட்டாக்கள் மற்றும் வெடிகுண்டுகளுடன் தீவிரவாதிகள் குழுவொன்று கைது செய்யப்பட்டுள்ளதாக இந்தியப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புதுடில்லியில் நடைபெறும் சுதந்திரதினக் கொண்டாட்டங்களில் குண்டுத் தாக்குதல் நடாத்த இத் தீவிரவாதிகள் சதித்திட்டம் தீட்டினார்களா என்பது குறித்து பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ந)

# சங்கரராமன் கொலை வழக்கு; மேலும் இருவர் ஜாமீனில் விடுதலை

(சென்னை)

காஞ்சிபுரம் சங்கரராமன் கொலை வழக்கில் கைதான அருண், சில்வஸ்டர் ஸ்டாலின் ஆகியோரை ஜாமீனில் விடுவிக்க சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம் வரதராஜப் பொருமாள் கோயில மேலாளர் சங்கரராமன் கடந்த செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி கோயில் வளாகத்திலேயே வெட்டிக் கொல்லப்பட்டார்.

இது தொடர்பாக ஜெயேந்திரர், விஜயேந்திரர், ரகு, அப்பு, ரவி சுபபிரமணியன், கதிரவன, அருண், சில்வஸ்டர் ஸ்டாலின் உட்பட 25பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் பலர் ஏற்கனவே ஜாமீனில் விடுவிக்கப்பட்டுள்ளனர். அருண், சில்வஸ்டர் ஸ்டாலின் ஆகியோரை ஜாமீனில் விடுவிக்க சென்னை உயர் நீதிமன்ற நதிபதி சர்தார் ஜக்ரியா ஹுசேன் கடந்த செவ்வாய்கிழமை உத்தரவிட்டுள்ளார்.

அவர்கள் இருவரும் திருச்சியில் தங்கியிருக்க வேண்டும். அங்குள்ள கன்டோன்மேன்ட் பொலிஸ் நிலையத்தில் தினமும் அவர்கள் கையெழுத்திட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் நீதிபதி இவர்களை ஜாமீனில் விடுதலை செய்துள்ளார். (ந)

# மன்மோகன் சிங் பதவி விலகு வேண்டும்

## வாஜ்பேயி கோரிக்கை

(புதுடில்லி)

சீக்கியர்களுக்கு எதிரான கலவரம் குறித்து விசாரித்த நதிபதி நாணாவதி தலைமையிலான கமிஷனில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளவர்கள் மத்திய அமைச்சரவையிலிருந்து விலக வேண்டும் என்று முன்னாள் பிரதமர் அடல் பிகாரி வாஜ்பேயி கோரிக்கை விடுத்துள்ளார்.

கமிஷன் முன் குற்றஞ்சாட்டப்பட்டவர்களைக் கைது செய்யாமல் இன்னமும் விட்டு வைத்திருப்பதற்காக பிரதமர் பதவியிலிருநது மன்மோகன் சிங் விலக வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பிரதமர் என்ற வகையில்,அரசு அளிக்கும் நடவடிக்கை அறிக்கைக்கு அவர்தான் பொறுப்பு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ந)

# 6.5 தொன் எடைகொண்ட மிகப்பெரிய தகவல் செயற்கைக்கோள்

(பாரீஸ்)




ஆவுஸ்திரேலியா, நியூசிலாந்து மற்றும் சில ஆசிய நாடுகளில் தகவல் தொடர்பு மற்றும் இண்டர்நெட் வசதிக்காக தாய்லாந்து நிறுவனம் ஒரு செயற்கைக் கோளை தயாரித்துள்ளது. ஆனால் தொழில் நுடப கோளாறு காரணமாக கடைசி நேரத்தில் அது ரத்து செய்யப்பட்டது.

கோளாறு சரி செய்யப்பட்ட பிறகு நேற்று முன்தினம் இந்த செயற்கைக்கோள் தென அமெரிக்காவின் பிரெஞ்சு கயானாவில் உள்ள கொரு ராக்கெட் தளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்பட்டது.

இதுவரை விண்ணில் செலுத்தப்பட்ட செயற்கைக்கோள்கலில் உலகிலேயே இதுதான் பெரிய செயற்கை கோள். இந்த செயற்கைக்கோளின் பெயர் 'தாய் காம்-4' இதன் உடை 6.5 தொன்.

இந்த செயற்கை கோளை கடந்த ஜுலை மாதமே விண்ணில் செலுத்த திட்டமிடப்பட்டிருந்தது.

'ஏரியான் - 5' என்ற ஐரோப்பிய ராக்கெட்டில் வைத்து இந்த செயற்கைக் கோள் செலுத்தப்பட்டது.

ராக்கெட் செலுத்தப்பட்ட அரைமணி நேரத்தில் செயற்கைக்கோள் அதன் சுற்றுப் பாதையில் நிலை நிறுத்தப்பட்டது. இந்தோனேஷியாவுக்கு மேலே அது பூமியின் சுற்றுப்பாதையில் நிலை நிறுத்தப்பட்டுள்ளது.

12 ஆண்டுகள் இந்த செயற்கைக்கோள் பணியில் ஈடுபடுத்தப்படும். ரூ.1840 கோடி செலவில் இந்த செயற்கைகோள் உருவாக்கப்பட்டுள்ளது. (ந)

# மரணத்தின் நிழலில்

## மீள் பார்வை சதாம் கதை 32

பி.ஜே.ராஜய்யா

## சதாம் எடுத்த வீடியோப் படம்!

சதாம் உசேனுக்குப் பிடித்த ஹாலிவுட் திரைப்படம் 'காட் ஃபாதர்' மணிரத்னத்தின் 'நாயகன்' இதன் தமிழ் உல்டா! நாயகனில் வரும் வேலு நாயக்கருக்கு இணையாக காட் ஃபாதரில் வரும் டான் கார்லியோன் கதாபாத்திரத்தில் மனதைப் பறிகொடுத்ததாலோ என்னவோ சதாமின் அணுகுமுறையில் ஒருவகை தாதாத்தனம் தூக்கலாக இருந்தது.

பாக்தாத் கல்து மண்டபத்தில் நடைபெற்ற மறுமலர்ச்சிக் கட்சியின் முக்கிய அவசர கூட்டத்தில் அவர் நடந்துகொண்டவிதம் இதற்கு ஓர் உதாரணம்.

அதிபர் சதாமுக்கு கட்சிக்குள் கடும் எதிர்ப்பு உருவாகியிருப்பதாக பரவலாகப் பேச்சு அடிபட்ட பரபரப்பான சூழ்நிலையில், இந்த அவசரக்கூட்டம் கூட்டப்பட்டது. இதனால் அழைக்கப்பட்டிருந்த உயர்மட்டத் தலைவர்கள் உட்பட சுமார் ஆயிரம் பிரதிநிதிகளும் தவறாமல் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள். பதவி விலகுவதாக சதாம் அறிவிக்கப் போகிறார் என்று சிலர் கவலையுடனும், வேறு சிலர் மகிழ்ச்சியுடனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அடுத்த அதிபர் யார் என்று தெரிந்துகொள்ள அவர்கள் அனைவரும் ஆர்வமாக இருந்தார்கள்.

இந்தக் கூட்டத்தின் முக்கியத்துவம் வேறு எவரையும் விட சதாமுக்கு நன்றாகத் தெரியும். ஆதலால் கூட்டத்தின் துவக்கம் முதல் முடிவுவரை மொத்த நிகழ்ச்சியையும் அவர் வீடியோப் படம் பிடிக்க உத்தரவிட்டிருந்தார்.



பிற்காலத்தில் கட்சிக்காரர்களுக்கும் நாட்டு மக்களுக்கும் அரசியல் பாடம் புகட்ட இவ் வீடியோப்படம் பயன்படுத்தப்பட்டது. ஈராக்கிலுள்ள மறுமலர்ச்சிக் கட்சி அலுவலகங்கள் அனைத்திலும் இது போட்டுக் காட்டப்பட்டது. பிரிட்டன், ஃபிரான்ஸ் ஜெர்மனி, அமெரிக்கா போன்ற வெளிநாடுகளில் படித்துக் கொண்டிருந்த ஈராக் மாணவர்களுக்கும் இதன் பிரதிகள் அனுப்பப் பட்டன. ஒரு பிரதி தற்போது பி.பி.சி.வசம் உள்ளது.

கறுப்பு வெள்ளையின இந்த வீடியோப்படம் ஹாலிவுட் த்ரில்லர் போல் பயங்கரமானது. திகில் நிறைந்தது.

கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் சதாமின் நெடு நாள் விசுவாசியுமான ரமதான் என்பவரின் உரையுடன் படம் துவங்குகிறது. 'சதாம் ஆட்சியைக் கவிழ்க்க பயங்கர சதி நடப்பது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த சதிகாரர்கள் இதோ இங்கே... இந்த ஹாலில்தான் அமர்ந்திருக்கிறார்கள்..." என்று ரமதான் தனது உரையில் ஒரு வெடிகுண்டைத் தூக்கிப் போட கூடியிருந்த அனைவரும் அதிர்ந்து போகிறார்கள்.

மேடையில் ஒரேயொரு நாற்காலி. அதில் சதாம் அமர்ந்திருக்கிறார். அவர் முகத்தில் எந்த ரியாக்ஷனும் இல்லை. அமைதியாக எட்டு அங்குல நீள ஹவானா சுருட்டைப் புகைத்துக் கொண்டிருக்கிறார்.

ஹவானா என்பது கியூபாவின் தலைநகர். அங்கு உற்பத்தியாகும் சுருட்டைத்தான் சதாம் விரும்பிப் புகைப்பார். இதை அறிந்த அவரது நல்ல நண்பரும் கியூபா அதிபருமான ஃபிடல் காஸ்ட்ரோ ஆண்டுதோறும் நூற்றுக்கணக்கான சுருட்டுக்களை தன் நாட்டில் இருந்து அவருக்கு அனுப்பிவைத்தார். அவற்றில் ஒன்று தான் சதாமின் உதடுகளுக்கிடையில் புகைந்து கொண்டிருக்கிறது.



சதிகாரர்கள் இந்த ஹாலில்தான் இருக்கிறார்கள் என்றால் அவர்கள் யார்? அச்சமும் ஆர்வமும் கட்டிப்புரள கூட்டத்தினர் ஒருவரையொருவர் கேள்விக்குறியுடன் பார்த்துக் கொள்கிறார்கள்.

இப்போது கூட்டத்துக்குள்ளிருந்து அப்துல் உசேன் என்ற தலைவர் எழுகிறார். சதாமின் போக்குப் பிடிக்காமல் கட்சிக்குள் எதிர்ப்புக்குரல் கொடுத்துவந்த அவர் மெதுவாக மேடையை நோக்கி நடக்கிறார்.

அவர் நடக்க இயலாமல் சிரமப்பட்டு நடப்பதிலிருந்து கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டிருக்கிறார் என்பது தெரிகிறது. மேடையேறி மைக் முன் வந்துநிற்கிறார். துன்புறுத்தலுக்கு ஆளான வேதனை அவர் முகத்தில் தெரிகிறது. பேச முடியாமல் தவிக்கிறார். பிறகு சிரமப்பட்டு பேசுகிறார். 'சதாமை கொல்ல சதிசெய்த பாவி நான்" என்று அறிவிக்கிறார். "நான் நரகத்துக்குத்தான் போவேன்" என்று தன்னைத் தானே சபிக்கிறார். சதித்திட்டத்தில் தனக்கு உடந்தையாக இருந்ததாக தனது நெருங்கிய நண்பர் உட்பட நான்கு தலைவர்களின் பெயர்களை வெளியிடுகிறார்.

கூட்டத்தினர் அதிர்ச்சியில் அப்படியே உறைந்துபோகிறார்கள்.

ஆனால், சதாம் முகத்தில் எந்த ரியாக்ஷனும் இல்லை. அவர் அமைதியாக சுருட்டு பிடித்துக் கொண்டிருக்கிறார். பேச்சை முடித்துக்கொண்ட அப்துல் உசேன், இனி என்ன செய்வதென்று தெரியாமல் அங்குமிங்கும் பார்க்கிறார். பிறகு மேடையை விட்டிறங்கி ஆடியன்ஸ் பக்கம் நடக்கிறார். ரமதான், தாரிக் அஸீஸ், இஸ்ஸாத் இப்ராஹிம் போன்ற சதாம் விசுவாசிகள் அனைவரும் ஒருபுறம் அமர்ந்திருக்கிறார்கள். அவர்களோடு அமராமல் எதிர்ப்புறம் சென்று ஒரு நாற்காலியில் உட்காருகிறார்.

சுருட்டுப்புகை சுற்றி மண்டிக்கிடக்க, வாக்குமூலத்தை கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்த சதாம் முகத்தில் எந்த டென்ஷனும் இல்லை. சொல்லப்போனால் அந்த மண்டபத்தில் கூடியிருந்தவர்களிலேயே சதாம் ஒருவர் மட்டும் தான் ரிலாக்ஸாகக் காட்சியளிக்கிறார்.

சதாம் மேலிருக்கும் கேமரா ஆடியன்ஸ் பக்கம் நகரும் போதெல்லாம் கூட்டத்தினர் எவ்வளவு பயத்துடனும் பதட்டத்துடனும் இருக்கிறார்கள் என்பதைக் காணமுடிகிறது. இப்போது சதாம் பேசவேண்டிய நேரம் அவர் சுருட்டை அணைத்து விட்டு எழுகிறார். நின்றுபேச வசதியாகப் போடப்பட்டிருக்கும் சாய்மேசை நோக்கி நடக்கிறார். சாய்மேசையை ஒட்டியிருக்கும் மைக் முன்வந்து நின்று கைகளைப் பின்புறம் கட்டிக்கொள்கிறார். கையில் குறிப்பு எதுவுமில்லாமல் நிறுத்தி நிதானமாக மிகுந்த நம்பிக்கையுடன் பேச்சை ஆரம்பிக்கிறார்.

"சதித் திட்டத்தை நான் முன்கூட்டியே கண்டுபிடித்து விட்டேன். ஆதாரங்களையும் கூட சேகரித்து விட்டேன். இருந்தபோதிலும் பொறுமையாக இருந்தேன். எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஏனிப்படி சும்மா இருக்கிறீர்கள் என்று நம் கட்சித் தோழர்கள் சிலர்கூட என்னைக் கடிந்துகொண்டார்கள்."

இப்படி அவர் பேசிக்கொண்டிருக்கையில் ஆடியன்ஸ் பக்கமிருந்து வெடித்துக் கிளம்பிய ஒரு பெருங்குரல் அவர் பேச்சை இடைமறிக்கிறது.

கூட்டத்தினர் அதிர்கிறார்கள். சதாம் பேச்சையே ஒருவர் இடைமறிக்கிறார் என்றால்... அவா யார்?

தெரிந்துகொள்ள அச்சத்துடன் திரும்பிப் பார்க்கிறார்கள். அங்கே...


அலி ஹாசன் அல் மஜீத் ஆவேசமாக நின்றுகொண்டிருக்கிறார்.

அவர் சதாமின் ஒன்றுவிட்ட தம்பி!

(தொடரும்)

## நல்லூரான் திருவடிக்கு

### இன்று நான்காம் திருவிழா



### நல்லையில் ஞானத் தமிழ்மணக்கும்

நல்லையில் ஞானத் தமிழ்மணக்கும்
நாரணன் மருகனின் அருள்சுரக்கும்
ஓடிடும் அல்லல்கள் இவனருளால்
ஆறுமு கத்திலும் ஒளியுமிளிரு
வல்லவர் வானவர் தம்துயரம்
வலிகெடச் செய்தருள் கூர்ந்தபிரான்
தொல்லைகள் தீர்த்தருள் புரிந்தருள்வான்
தூயவன் மலரடி பணிந்திடுவோம்

*சு.குகதேவன்*

### கருவூலம் காட்டுவாயே!

அன்பினா லின்ப மீயும்
அறுமுகப் பெருமான் தம்மை
துன்பமே அனுகா வண்ணம்
துதிக்கவே துயர் துடைப்பான்
இன்பவாழ் வினிதே கூட்ட
இயலிசை இளமை காட்ட
கன்னலா யினிக்கு முந்தன்
கருவூலம் காட்டு வாயே!

*கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்*

### ஓடோடி வாவா

துன்பங்கள் யாவுமே தீரும்
உன் திருக்கோவில்
வலம்வந்து நின்றால்
இன்பங்கள் நிறைவாக
கூடும் தினம் உள்வீதி
சுற்றிவலம் வந்தால்
எங்கனும் உன்நாமம் கேட்கும்
அதனால் உள்ளத்தே
மகிழ்ச்சி தான் பொங்கும்
எங்கள் நல்லைப் பதியமர்
குமரா! எழில்மிஞ்ச
ஓடோடி வாவா!!

*அரியாலையூர் சி.சிவதாசன்.*

### நல்லூர்க் கந்தன் கழலிணை

நல்லூர்க் கந்தன் கழலிணை தொழுவார்க்கு
எல்லாப் பிணியும் இணைந்தே பறந்தோடும்

பொல்லாப் பெதுவுமில்லை என்ற அச்செல்லப்பன்
நல்லூர்த் தேரடியில் ஞானம் பெற்றான்

எப்போதோ முடிந்த காரியம் என்னும்
தப்பில்லா மெய்ஞான வாக்கது தன்னையே
அப்படியே எம் மனதில் வரித்திடவே
செப்படி வித்தை கள்சேர்ந்தே பறந்தோடும்

சும்மா இரு என்ற யோகர்சுவாமியும்
செம்மை சேர் சேயோன் திருவடி வழுத்திடும்
இம்மை மறுமை எனும்இரு நிலை நீக்கிவிட்ட
தம்மை வருத்தியசெல் லப்பர் சீடராவர்

*நா.வரதராசா*

### வேல் பட்டழிந்தது

தேரணியிட்டுப் புரமெரித்தான் மகன்
செங்கையில் வேல்
கூரணியிட்டு அணுவாகி கிரௌஞ்சம்
குலைத்து அரக்கர்
தேரணியிட்டு வளைந்த கடகம்
நெளிந்தது சூர்ப்
பேரணி கெட்டது தெய்வேந்த்ர
லோகம் பிழைத்ததுவே

*அருணகிரியார்*

கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல் - குறள்.

வலம்புரி

# ஜே.வி.பியின் வக்கிரம்

ஒரு காலத்தில் இந்த நாட்டில் அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் ஆயிரக்கணக்கில் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்தவர்கள் ஜே.வி.பியினர்.

இந்த வெறிபிடித்த அவர்கள் காரண காரியம் இன்றி இளைஞர்களை சுட்டுக்கொன்றனர். 'சேகுவரா' புரட்சியை உருவாக்கி நாட்டை சீரழித்தனர். இவ்வாறு பேயாட்டம் ஆடிய அவர்கள் அண்டை நாடான இந்தியாவின் உதவியுடன் கட்டுப்படுத்தப்பட்டனர்.

அப்போது பிரதமராக இருந்த சிறிமாவோ பண்டாரநாயக்கா ஒருவாறாக சேகுவரா புரட்சிக்கு தலைமை வகித்த றோகண விஜயவீராவை கைது செய்து சிறையில் அடைத்தார்.

அப்பாடா, நாட்டை உலுப்பிய பிசாசு ஒருமாதிரியாக அடைபட்டு விட்டது என்ற அளவில் மக்கள் நிம்மதியடைந்தனர். எனினும் ஆட்சிக்கு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சிறையில் இருக்கவேண்டிய றோகணவிற்கு மன்னிப்பு வழங்கி விடுதலை கொடுத்தார்.

ஜே.ஆர்.பார்த்த அநேகமான குதர்க்க வேலைகளில் இதுவும் ஒன்றென அன்றைய அரசியல்வாதிகள் பேசிக்கொண்டனர். சிறையில் இருந்து வெளியேறிய றோகண விஜயவீர, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டார். இருந்தும் அத்தேர்தலில் அவர் தோல்வி கண்டதுடன் காலக்கிரமத்தில் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரின் மரணத்தோடு அவர் விதைத்த நச்சு விதைகள் கருகிவிடுமென எதிர்பார்த்த போதிலும், நச்சுச் செடிகள் ஜனநாயகம் என்ற மரத்தைப் பற்றிக்கொண்டு வேகமாகப் படரத்தொடங்கின.

21ஆம் நூற்றாண்டில் வாழ்கின்றோம் என்ற சிந்தனைகள் எதுவும் இன்றி அரசியல் நடத்துவதே அவர்களின் இலக்காக இருந்தது.

தமிழ் மக்களை எதிர்ப்பதும், தமிழ் மக்களின் உரிமைக்காக வீரத்துடன் போராடி உலகளாவிய ரீதியில் மதிப்புப் பெற்ற விடுதலைப்புலிகளை எதிர்ப்பது என்ற இரண்டு விடயங்களை மட்டும் இலக்காகக் கொண்டு ஜே.வி.பியினர் அரசியல் நடத்துகின்றனர்.

இதை விட்டால் சிங்கள மக்களை ஏமாற்றுவதற்கு வேறு வழியே இல்லை என்ற அடிப்படையில், அவர்களின் அரசியல் எதிர்காலம் நகர்கின்றது. தமது அரசியல் ஸ்திரத்தை பாதுகாப்பதற்காகவும், பௌத்த பீடாதிபதிகளின் ஆதரவைப் பெறுவதற்காகவும் தற்போது பொதுக்கட்டமைப்பை எதிர்ப்பதை பிரதான வேலைத்திட்டமாகக் கொண்டு செயற்படுகின்றனர்.

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டமைக்காக அரசிற்கான ஆதரவை விலக்கிக்கொண்ட ஜே.வி.பி. தற்போது ஜனாதிபதித்தேர்தலில் அரசுக்கு ஆதரவு அளிப்பதாக இருந்தால், பொதுக்கட்டமைப்பை இல்லாதொழிக்க வேண்டுமென நிபந்தனை விதித்துள்ளது. எப்படி இருக்கின்றது ஜே.வி.பியின் வக்கிரத்தனம் பார்த்தீர்களா!

# இலங்கை மீது இந்தியா போர்தொடுத்தால் அது தோல்வியிலேயே முடிவடையும்

## அமெ.ஆய்வு மையம் கருத்து

(இலண்டன்)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்திற்கு தீர்வு காண இந்தியா மீண்டும் ஒரு இராணுவ நடவடிக்கையை மேறகொண்டால் அது தோல்வியிலே முடிவடையும் என அமெரிக்கா ஆய்வு மையம் கருத்து வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்தியா இலங்கை மீது இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் போவதில்லை. அதற்கான சாத்தியக்கூறுகள் தென்படவில்லை என பிரித்தானியாவில் இயங்கி வரும் சமூக விவகாரங்களுக்கான அமெரிக்க ஆய்வு மையம் என்ற அமைப்பே இக்கருத்தை வெளியிட்டுள்ளது.

இலண்டன் குயின்ஸ்மேரி பல்கலைக்கழக பேராசிரியா பிறைட் ஓடுபபி புதுடெல்லியில நடைபெற்ற கருததரங்கு ஒன்றில் நேற்று முன்தினம் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை சமாதான முயற்சியில் இந்தியா பார்வையாளராக இருப்பதைவிட்டு நோர்வே போன்று அனுசரணையாளராகப் பங்காற்றுகின்ற சமயம் நெருங்கிவருகிறது.

குறிப்பாக நோர்வேத் தேர்தல் நெருங்கி வருவதையிட்டு இந்தியா தனது பார்வையை சமாதான முயற்சிகளையும், நோர்வே இவ்வளவு காலமும் செயற்பட்டுவந்த அனுசரணையாளர் பணியினையும் விரும்பி நிற்கின்றது.

இதனை இந்தியா பல சந்தர்ப்பங்களில் சுட்டிக் காட்டியிருந்தது. அதில் தனது முழுமையான உடன்பாட்டினையும் காட்டிவந்தது.

அதன் அடிப்படையில் அதற்கான காலமும் அண்மித்து வந்துள்ளமையினை எம்மால் உணரமுடிகின்றது. குறிப்பாக இம் மாதத்திற்குள் இது சாத்தியப்படும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் பிராந்தியத்தில் உள்ள போராளிகளுக்கு ஆயுத விநியோகம் மற்றும் குண்டுத தாக்குதலில் ஈடுபடுவதற்கு உதவும் ஆற்றலைக் கொண்டிருககின்றார்கள். அமெரிக்க இது சம்பந்தமாக அதிக அக்கறை கொண்டிருக்கின்றது.

எனவே அமெரிக்கா இந்த விடயததில் மிகவும் கடினமான நகர்வை மேற்கொண்டு வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரு-4,9)

# தமிழ்மக்களுக்கு சம அந்தஸ்தை வழங்குவதன் மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஜனாதிபதி முயற்சி

## ஆஸி.பத்திரிகைக்கு கொசும்ஸ் சிறி பாலபெத்தபெண்டி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு சம அந்தஸ்தை வழங்குவதன் அடிப்படையில் இரு தசாப்த காலமாக இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றைக் காண ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக அவுஸ்திரேலியாவுக்கான இலங்கைத் தூதுவர் கொசும்ஸ் சிறி பாலபெத்தபெண்டி தெரிவித்துள்ளாா.

அவுஸ்திரேலிய பத்திரிகை ஒன்றுக்கு அண்மையில் அளித்த பேடடி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அப் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

விடுதலைப் புலிகளின் முன்னைய மற்றும் தற்போதைய நடவடிக்கைகளின் அடிப்படையில் அது முற்றிலும் நமபமுடியாத ஓர் அமைப்பு என நிரூபிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் விடுதலைப் புலிகளை நாம் அவ்வாறானதொரு நிலைப்பாட்டில் கருதவில்லை. தமிழ் மக்களுக்கான தீர்வை, சம அந்தஸ்தை வழங்குவதன் மூலம் அவர்களுககுப் பெற்றுக்கொடுப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், விடுதலைப் புலிகள் அமைப்புடன் பொதுக் கட்டமைப்பு உடன்படிக்கையில் அரசாங்கம் கைச்சாத்திட்டதன் மூலம் அரசிலிருந்து வெளியேறிய மககள் விடுதலை முன்னணியின் செயல் சரியானதே எனினும், சுனாமியால் அழிவடைந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்காக மக்கள் விடுதலை முன்னணி மீண்டும் அரசாங்கத்துடன் இணைந்துகொள்ளும் என தான் நம்புவதாகவும் கொசும்ஸ் சிறி பாலபெத்தபெண்டி குறிப்பிட்டுள்ளார். (ற)

# சேதமடைந்த குளங்களை புனரமைக்க நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டின் நீர்ப்பாசன வழிமுறைகளை அபிவிருத்தி செய்வதற்கான திட்டம் ஒன்றை அரசாங்கம் ஆரம்பிக்கவுள்ளது.

திங்கட்கிழமை ஆரம்பிக்கவுள்ள இத் திட்டத்தில் நாடடின் சகல பகுதிகளிலும் உள்ள சேதமடைந்த 1300 நீர்ப்பாசனக் குளங்கள் திருத்தப்படவிருக்கின்றன.

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தகவல் தருகையில், எதிர்வரும் காலபோகத்திற்குத் தேவையான நரை தேக்கி வைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கம் என்று தெரிவித்தார்.

ஒன்றரை மாதத்திற்குள் புனரமைப்பு நடவடிக்கைகள் பூாததி செய்யப்பட இருக்கினறன. விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படச்செய்வதும் இந்தத் திட்டத்தின் மற்றுமொரு நோக்கமாகும்.

இதனைக் கருத்திற்கொண்டு சர்வதேச சந்தைக்கு வெற்றிலை ஏற்றுமதி செய்வதன் சாத்தியம் பற்றியும் அரசாங்கம் ஆராய்ந்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-7)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கொழும் கொட்டாஞ்சேனைப் பகுதியில் நேற்றுக் காலை ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

கொட்டாஞ்சேனை எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகாமையில் நேற்றுக் காலை 8.30மணியளவில் சுட்டுக் கொல்லபபட்ட இவர் கொட்டாஞ்சேனைப் பகுதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளரும், அமைச்சர் ஒருவரின் உதவியாளராக செயற்பட்டவருமான வர்ணகான் சமரசிங்க என அடையாளம் காணப்பட்டிருக்கிறார்.

வாகனத்தில் சென்றவர்கள் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இக்கொலை சம்பந்தமான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்கின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (அ-7)

# தொடர்ந்து கிளிநொச்சிக்கு மின்சாரம் வழங்க அமைச்சரவை அங்கீகாரம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்துக்கு வழங்கப்பட்டு வரும் மின்விநியோகத்தினை தொடர்ந்தும் முன்னெடுக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளினை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனை அவர் அறிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு மின்சாரத்தினை வழங்குவதற்காக 2007ஆம் ஆண்டில் செயற்திட்டம் ஒன்று எம்மால் ஆரம்பிக்கப்படும் வரை தற்போது வழங்கப்பட்டு வரும் மின்விநியோகத்தினை நீடிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மின்வலு எரிசக்தி அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவினால் அமைச்சரவைக்கு முன்வைக்கப்பட்டுள்ள பத்திரத்திற்கு அமைச்சரவையின் அனுமதி வழங்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (அ-4)

## தினசரி தியானம்



### விவேகச் சிந்தனைகள்

என்றென்றும் நான் உனக்கு உரியவன். இனி நான் எது செய்தாலும் அது நீ செய்வதே ஆகும். "நான், என்து" என்பனவெல்லாம் எள்ளளவும் என்னிடம் இல்லை. நீ நேர்மையுடன் இரு. தைரியமாக இரு. எந்த நெறியானாலும் அதை பக்தி சிரததையுடன் பின்பற்று. அப்போது நீ இறைவனை அடைவது உறுதி.

சுவாமி விவேகானந்தர்

# மேர்வின் சில்வாவின் மகனுக்கு எதிராக வழக்குத் தொடர சட்டமா அதிபர் முடிவு

(கொழும்பு)

பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வருக்கும் மற்றுமொருவருக்கும் எதிராக கொழும்பு மேல்நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்களை சமர்ப்பிக்க சட்டமா அதிபர் நேற்று தீர்மானித்துள்ளார்.

கொழும்பில் இரவுக் களியாட்ட விடுதி ஒன்றிற்குள் பொலிஸ் அதிகாரிகள் சிலரை துப்பாக்கி முனையில் தாக்குதல் மேற்கொண்டு காயப்படுத்தியமை மற்றும் அவர்களது உத்தியோக பூர்வ கடமைக்கு இடையூறு விளைவித்தமை தொடர்பாக இலங்கை தண்டனை சட்டக்கோவையின் 232 வது பிரிவின் கீழ் இக்குற்றச்சாட்டுக்களை முன்னெடுக்க நடவடிக்கை எடுத்ததாக சொலிற்றல் ஜெனரல் சி.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பு கோட்டை பொலிஸாரினால் சம்பவம் தொடர்பாக முதற்கட்ட விசாரணைகள் முடிவடைவதற்கு முன்னர் பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் புதல்வர் உட்பட சந்தேக நபர்கள் மூவர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

எனினும் சட்டமா அதிபர் கே.சி.கமலசபேசனின் விசேட உத்தரவிற்கமைய சம்பவத்துடன் தொடர்புடைய அனைத்து தரப்பினரது வாக்கு மூலங்களையும், பொலிஸ்விசாரணை அறிக்கையினையும் சட்டமா அதிபர் திணைக்களம் பரிசீலனை செய்தது.

குறித்த சம்பவம் தொடர்பாக கிடைத்துள்ள சாட்சியங்கள் மற்றும் ஏனைய தகவல்களையும் கருத்திற்கொண்டு பிரதியமைச்சரின் புதல்வர் மற்றும் சம்பத் குமார, ராஜபக்ஷ ஆகிய பிரதிவாதிகளுக்கு எதிராக கொழும்புமேல் நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுக்களை சுமத்துவதற்கு சட்டமா அதிபர் தீர்மானத்துள்ளார். (ச-4)

# அருளமுதம் நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலய திருப்பணிச்சபையால் கவிஞர் வேலணையூர் பொன்னண்ணாவினால் தொகுக்கப்பட்ட 'அருளமுதம்' ஆவணப்பதிவு நூல் வெளியீட்டு விழா நாளை மாலை 3மணிக்கு முத்துமாரி அம்மன் ஆலய தொண்டர் தில்லையம்பலம் செல்லமுத்து அமுதசுரபி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

திருப்பணி சபைத்தலைவர் ந.ஜெகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு ஆசியுரையினை சிவஸ்ரீ ந. மகேஸ்வரக்குருக்கள் ஆற்றவுள்ளார்.

நூல்வெளியீட்டு உரையினை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொன்.பாலசுந்தரம்பிள்ளையும் ஆய்வுரையினை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத்தலைவர் கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும் நிகழ்த்தவுள்ளனர். (ச)

# சுனாமி அகதிமுகாம் மீது இனந்தெரியாதோர் சூடு

(கல்முனை)

அம்பாறை மாவட்டம் கல்முனை நகரில் உள்ள சுனாமி அகதிமுகாம் ஒன்றின் மீது நேற்று முன்தினம் இரவு அடையாளம் தெரியாத நபர்களினால் கைக்குண்டுத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரும் மற்றும் ஊர்காவல் படைவீரர் ஒருவர் உட்பட நான்கு பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த பெண் ஒருவர் உட்பட ஏனைய இருவரும் அம் முகாமில் தங்கி இருக்கும் சிவிலியன்கள் என கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் முகாம் முன்பாக பாதுகாப்பு கடமையில் இருந்த பொலிஸார் மீது தாக்குதலை நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ச-4)

# ஹலோ ரெஸ்ட் வான்மோதி கணவனும் மனைவியும் காயம்

(யாழ்ப்பாணம்)

ஹலோரெஸ்ட் மிதிவெடி அகற்றும் நிறுவனத்தின் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார். மற்றொருவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் நேற்று மதியம் கல்வியங்காட்டுச் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது. புத்தூரைச் சேர்ந்த சந்திரன் அவரது மனைவி மாலா ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

மோட்டார் சைக்கிளில் நல்லூர் ஆலயத்திற்குச் சென்ற வேளை ஹலோ றெஸ்ட் வாகனத்துடன் மோதியுள்ளது. மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரும் காயமடைந்த நிலையில் யாழ்.போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ச-19)

## ரேலங்கியும் அவரது...

வரவேற்பாளர்கள் இருவரும் மதிய உணவிற்காக வெளியே சென்றிருந்த வேளையிலேயே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக பொலிஸ் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

கொலை செய்யப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து எதுவும் அறியமுடியவில்லை என பொலிஸார் கூறினர். ஊடகவியலாளரான ரேலங்கி 1979-1983 காலப்பகுதியில் யாழ்பாணம் மணிக்குரல் ஒலிபரப்புச் சேவையில் அறிவிப்பாளராக பணியாற்றினார். பின்னர் 1987ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் இணைந் தார். அங்கு அறிவிப்பாளராகவும் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் கடமையாற்றினார்.

2000 ஆம் ஆண்டு அதில் இருந்து விலகி ரூபவாஹினியில் அறிவிப்பாளராக கடமையாற்றினார். அப்பொழுது உதயதரிசனம் நிகழ்வில் அறிவிப்பாளராகவும் பணியாற்றினார்.

1974 ஆம் ஆண்டு 'தெய்வம் தந்த வீடு' தமிழ்ப்படத்தில் கதாநாயகியாகவும் அவர் நடித்துள்ளார். இவர்களுக்கு 18 மாத பெண் குழந்தை ஒன்றும் இருப்பது குறிப்பிடத் தக்கது இதேவேளை சின்னத்துரை செல்வராசா புளொட் அமைப்பின் தீவிர ஆதரவாளர் எனத் தெரிவிக்கப்பட்டது. இச் சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ச-6-04)

## இலங்கைக்கான...

இதன்போது ஊர்காவ்ல் படைவீரர் ஒருவர் காயமடைந்துள்ளார். சம்பவ இடம் பெற்ற இடத்தின் ஊடாக அவர் பயணம் செல்வதற்கு ஒருசில மணித்தியாலங்களிற்கு முன்பாகவே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ச-4)

## மூன்று...

அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.ஆர். நித்திரபால வர்த்தக வாணிப நுகர்வோர் விவகார பிரதியமைச்சராகவும், பாராளுமன்ற உறுப்பினர் நிர்மலா கொத்தலாவல சிறிய கிராமிய கைத்தொழில் பிரதியமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர். (ச-4)


பதவி வெற்றிடம்

பத்திரிகை விநியோகஸ்தர்கள் (சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத் திருப்போர்)

வலம்புரி நிறுவனத்திற்கு 8கிலோ மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்கள் மட்டும் சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் நேரில் வரவும்.

இல. 3, 2ஆம் ஒழுங்கை
பிறவுண் வீதி யாழ்ப்பாணம்.

ஆளணி முகாமையாளர்
வலம்புரி.

Jaffna College Institute of Technology
Vaddukoddai

Register for the following course immediately.

*Civil Diploma*

Covers City & Guilds (uk) Construction Industry Technician Diploma Syllabus

*Duration : 1 year (full time)*

Apply before 18th August 2005

*For further details contact;*

The Director
Jaffna College Institute of technology
Vaddukoddai.

Tel.Phone:0602213139 (C-1609)

For Computer Repairs Software Installation, Net 2 Phone Connections, Computer Hardware Classes at your place

Contact No :0773276374

(9767)

Mango's
Veg Restaurant
அறுசுவை உணவுகளுடன் வருகிறோம்

திருமணக்கார் [குளிரூட்டியது]
வாடகைக்கு



- திருமண வைபவங்கள் (அலங்காரத்துடன்)
- விசேட வைபவங்கள்
- சுற்றுலாக்கள்

போன்ற அனைத்துச் சேவைகளுக்கும் புத்தம் புதிய (ஆங்கில இலக்கம் கொண்ட) குளிரூட்டிய நவீனகார்கள், சாரதியுடன் நியாயமான செலவில் உயர்ந்த சேவையுடன் வாடகைக்கு கிடைக்கும்.

தொடர்பு: ரட்ணம்
சோமசுந்தரம் பாலர் பாடசாலை 22, சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்

T.P: 0777-903090, 077-3086939, 0777-246117, 077-6018467

(அ-9843)

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், மீனா நடித்த
செங்கோட்டை
கா.நே.11.00,2.45,6.00 (பு.நே)

மனோகரா யாழ்.
இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின அதிரடிவெளியீடாக
மாதவன், சதா, கோவை சரளா நடித்த




கா.நே: 10.30, 02.30, 6.30, 9.30

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
அர்ஜுன், சினேகா, கிரண், வடிவேலு சேர்ந்து கலக்கும்
கா.நே 10.30, 02.30 06.30 09.30




இந்தியாவிலும். இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
வெகுவிரைவில் கிச்சா வயது 16
ஜெய் ஆகாஷ், சிம்ரன் நடிப்பில்


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.